பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 18 திங்கட்கிழமை 04.11.2019 கதிர் 364

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் தென்னிலங்கைக் கட்சிகளில் அந்தத் தேர்தலை ஒட்டிக் கிளம்பிய குழப்பங்கள், குத்துவெட்டுக்கள் பெரும்பாலும் அடங்கி விட்டன. அவை எல்லாம் பிரசாரம், பொதுக் கூட்டங்கள் என்று சீரியஸாகி விட்டன. பக்கம் 02

# சஜித்தை ஆதரிக்க தமிழரசு தீர்மானம்

## மத்திய குழு நேற்று முடிவு

வவுனியா, நவம்பர்04

தற்போது இடம்பெறும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை முழுமையாக ஆதரிப்பது என இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்திருக்கிறது. பக்கம் 02



# தமிழரசின் முடிவை ரெலோ ஏற்காதாம்

## செயலாளர் ஸ்ரீகாந்தா உறுதி



யாழ்ப்பாணம், நவம்பர் 04

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவை ரெலோ ஒருபோதும் ஏற்காது. அந்த தீர்மானத்துக்கு எமது கட்சி கட்டுப்படாது.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் ரெலோவின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என். ஸ்ரீகாந்தா. பக்கம் 03

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் - பொலிஸார் வவுனியாத் தமிழரசு கூட்டத்துக்கு வெளியே முறுகல்

### சம்பந்தன், சுமந்திரனை சந்திக்க அனுமதிக்காதமையால்



வவுனியா,நவ.04

வவுனியாவில் நேற்று இடம்பெறும் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்ட மண்டபத்தை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முற்றுகையிட்டமையால் பொலிஸார் குவிக்கப்பட்டு பதற்றமான நிலை ஏற்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியா, இரண் பக்கம் 03

## சம்பந்தர், சுமந்திரனின் வாகன அணிக்கு தனது செருப்பை எறிய முற்பட்ட பெண்!



### பொலிஸார் மடக்கி பிடிப்பு

வவுனியா, நவ.04

நேற்று வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் முடிவடைந்து சம்பந்தன் மற்றும் சுமந்திரன் புறப்பட்டுச் சென்ற வாகனத்தொடரணிக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களில் தாயொருவர் தனது செருப்பைக் கழற்றி எறிய முற்பட்ட போது பொலிஸார் அவரை மடக்கி பக்கம் 02

## தமிழரசு முடிவுக்கு புளொட் இணக்கம்

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு சித்தார்த்தன் எம்.பி. தலைமையிலான புளொட் அமைப்பு பெரும்பாலும் இணக்கம் தெரிவித்து ஒத்துப் போகுமெனத் தெரிய வருகின்றது. பக்கம் 03

## கூட்டமைப்பாக முடிவை அறிவிக்கும் பொறுப்பு சம்பந்தனிடம் ஒப்படைப்பு!

வவுனியா, நவ.04

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்திருந்தாலும் அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் பேசி அது பற்றிய கூட்டு முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் பொறுப்பை தமிழரசுக் கட்சி அதன் மூத்த தலைவரும் கூட்டமைப் பக்கம் 02

## வேலணையில் ரணில்!





யாழ்ப்பாணம், நவ. 04

கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய பக்கம் 02


## தட்டெறிதலில் தங்கத்தை வென்றார் ஹாட்லி வீரர்!



யாழ்ப்பாணம், நவ. 04

அகில இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிகளின் கடைசி நாளான நேற்றுக் காலை நடைபெற்ற 20வயதுக்குட்பட்ட ஆண்களுக் பக்கம் 03

## ரெலோவில் இருந்து விலகினார் சிவாஜி!



யாழ்ப்பாணம், நவ. 04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்து விலகுவதாக ஜனாதிபதி பக்கம் 02

## இலங்கை ராணுவத்துக்கு மாலியில் பாதிப்பில்லை!

கொழும்பு, நவ. 04

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவ முகாம்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், அங்கு ஐ.நா. பக்கம் 02

## நாம் துரோகியென்றால் மஹிந்தவும் துரோகிதான்

### வேலணையில் கூறினார் ரணில்



யாழ்ப்பாணம், நவ. 04

பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையிலேயே நாம் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளவுள்ளோம். தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கவுள்ள சஜித் துரோகியென்றால், பக்கம் 03

## யாழ்.பல்கலை மருத்துவ பீட மாணவன் உயிரை மாய்த்தார்

### விடுதியிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 4ஆம்வருட மாணவன் ஒருவர் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

அவரது சடலம் யாழ்ப்பாணம் பக்கம் 02

# வெளிநாடுகளில் உள்ள ஒன்றரை லட்சம் பேர் வாக்களிப்பதற்காக நாடு திரும்புகின்றார்கள்




ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளி நாடுகளிலுள்ள இலங்கையர்கள் சுமார் ஒன்றரை லட்சம் பேர் நாடு திரும்ப விமானப் பயணச் சீட்டுக்களை ஒதுக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 8 ஆம் திகதி முதல் அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு விமானச் சீட்டுக்களை ஒதுக்கிக்கொண்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

கொரியா, ஜப்பான், சீனா, இங்கிலாந்து, சவுதி அரேபியா, இத்தாலி, அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் தொழிலுக்காகச் சென்ற இலங்கையர்களே இவ்வாறு வருவதற்குப் பதிவு செய்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறு பதிவு செய்தவர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தையும் தென் மாகாணத்தையும் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இவர்கள் இலங்கை வருவதன் காரணமாக எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை நோக்கி வரும் விமானங்களில் ஆசனங்கள் ஒதுக்குவதற்கு முடியாதுள்ளதாகவும் சதேசிய வார இதழ் ஒன்று அறிவித்துள்ளது.

## சம்பந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தனர்.

வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு நேற்று ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக முடிவெடுப்பதற்காகக் கூடியிருந்தது.

இதன்போது கூட்டம் இடம்பெறும் இடத்திற்கு முன்பாக வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முற்பட்டபோது பொலிஸார் அவர்களைக் கூட்டம் இடம்பெறும் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

இந் நிலையில் சுமார் 50 மீற்றர் தூரத்தில் நின்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தமிழரசுக்கட்சியின் கூட்டம் முடிவடைந்து சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் தமது பாதுகாப்பு வாகனத் தொடரணியில் வெளியேறினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை வாகனத்தொடரணியை நெருங்காது பொலிஸார் தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தாயொருவர் தனது செருப்பைக் கழற்றி வாகனத் தொடரணி மீது எறிய முற்பட்ட போது அவரை அங்கிருந்த பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். இதனால் கோபமுற்ற அந்தத் தாய் பொலிஸாரை ஏசியமையுடன் துரோகம் செய்கின்றனர் எனவும் திட்டினார்.

## கூட்டமைப்பாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் ஒப்படைத்துள்ளது.

இது குறித்து சுமந்திரன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தீர்மானத்தைத் தமிரசுக் கட்சியின் செயற்குழு உத்தியோக பூர்வமாக எடுத்திருந்தாலும் நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவக் கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் இதனை அறிவிப்பது மற்றும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது போன்ற விடயங்களைக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கைகளில் ஒப்படைத்து இருக்கின்றோம். இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய இரண்டு கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார். - என்றார்.

## ரெலோவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்.

ரெலோவின் பொதுச்செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறீகாந்தாவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் அனுமதியின்றி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் சிவாஜிலிங்கம் மீது கட்சியின் கட்டுப்பாட்டை மீறினார் என நடவடிக்கை எடுக்கப்படுவதாக ரெலோ அறிவித்திருந்தது.

இதனையடுத்து தானாகவே கட்சியில் இருந்து விலகுகிறார் எனச் சிவாஜிலிங்கம் நேற்று அறிவித்துள்ளார்.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமரின் அலரிமாளிகைக்கு முன்பாக எதிர்வரும் 6ஆம் திகதி திட்டமிட்டப்படி சத்தியாகிரகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-7)

## சஜித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மத்திய செயற்குழு நேற்று வவுனியாவில் கூடி நீண்ட நேரம் விரிவாக ஆராய்ந்த பின்னர் ஏகமனதாக இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்த ஊடக சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராஜா ஆகியோரும் உடன் இருந்தனர்.

சுமந்திரன் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் காலை 10.30 முதல் 4.30 வரை நடைபெற்றது. இதில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டோம்.

முன்னதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய நாடாளுமன்றக் குழு, தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றின் கூட்டங்களில் இது பற்றி ஆராயப்பட்டப்பட்டது. இன்று எமது கட்சியினுடைய உத்தியோக பூர்வ முடிவாக அன்ன சின்னத்தில் போட்டியிடுகின்ற சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்த தீர்மானம் தமிரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ செயற்குழு எடுத்திருந்தாலும் நாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவக் கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் இதனை அறிவிப்பது மற்றும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது போன்ற விடயங்களை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கைகளில் அவற்றை ஒப்படைத்து இருக்கின்றோம். இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய இரண்டு கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடி இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார்.

நாங்கள் பிரதான இரு வேட்பாளர்கள் தொடர்பான பல விடயங்களை ஆராய்ந்து இருக்கின்றோம். அதனைக் குறிப்பிட்டு எதனையும் கூற முடியாது. அவர்களுடைய கடந்தகால செயற்பாடுகள், ஜனநாயகத்திற்கு அவர்கள் காட்டும் பங்களிப்பு, எங்களுடைய எதிர்பார்ப்புக்கள், அவர்களுடைய தேர்தல் அறிக்கைகள் இப்படியாகப் பல விடயங்களை ஆராய்ந்தோம். இன்றைய நிலையில் எங்களுடைய மக்களுக்கு உபயோகமான ஒரு நடவடிக்கை சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று ஏகமனதாக முடிவு எட்டப்பட்டது.

எங்களுடைய கருத்தையும் கேட்டுத்தான் மக்கள் வாக்களிக்கிறார்கள். மக்கள் சுயமாக வாக்களிப்பவர்கள். மக்கள் திறமைசாலிகள். மக்களுக்கு அரசியல் தெரியும். விசேடமாகத் தமிழ் மக்கள் நிதானித்து வாக்களிப்பவர்கள். அவர்களுக்கு அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. மக்களுடைய கருத்தையும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். மக்களுக்குத் தலைமைத்துவம் கொடுப்பது என்பது நீங்கள் விரும்பியவருக்கு வாக்களியுங்கள் என்று கூறுவதல்ல. நிதானித்து, இருக்கின்ற அரசியல் நிலையில் தமிழ் மக்கள் சார்பாக அரசாங்கத்தோடும் நாட்டில் இருக்கும் கட்சிகளோடும் பேச்சு நடத்துவதுபவர்க நாங்கள். நாங்கள், மக்களுடைய பிரதிநிதிகள். மக்கள் எங்களைத் தங்களது பிரதிநிதிகளாக நியமித்துள்ளார்கள். அந்தக் கடப்பாட்டைச் சரியாகச் செய்ய வேண்டுமாக இருந்தால் மக்களைச் சரியாக வழிகாட்ட வேண்டும்.

இந்தத் தீர்மானம் சம்பந்தமான விளக்கமான காரணங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் பேசிய பின்னர் விவரமாக அறிக்கையாக வெளியிடுவார். - எனத் தெரிவித்தார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தேர்தலில் நேரடியாகக் களம் இறங்காத தமிழ்க் கட்சிகளிடையே இப்போதுதான் - வாக்களிப்புக்கு இன்னும் 12 நாள்கள் இருக்கையில்தான் - குழப்பங்கள், குத்துவெட்டுகள், குளறுபடி கள் சூடு பிடித்திருக்கின்றன.

தமிழரசுக் கட்சி ஒரு முடிவு எடுத்துவிட்டது. வழக்கம்போல அதற்குப் பின்னால் பிகு பண்ணாமல் புளொட் செல்லும் என்பதும் நிச்சயமாகிவிட்டது.

வழமைபோல, ரெலோவுக்குள் அதன் செயலாளர் ஸ்ரீகாந்தா தூள் கிளப்புகின்றார். தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஒத்து ஊதுவார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். கட்சிக்குள் இந்த விவகாரத்தில் செல்வத்தின் முடிவு எடுபடுமா அல்லது ஸ்ரீகாந்தாவின் கை ஓங்குமா என்பதைப் பொரும்பாலும் நாளை மறுதினம் மாலையில் - ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டம் முடியும் போது - அறியக் கூடியதாக இருக்கும்.

பாவம் ஸ்ரீகாந்தா. வழக்கமாக இத்தகைய விடயங்கில் அவருக்குப் பக்கத்தில் நிற்கும் கட்சியின் 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி சிவாஜிலிங்கம் இப்போது கட்சியை விட்டு வெளியேறிவிட்டார். ஸ்ரீகாந்தாவுக்குப் பக்கபலமாக யார் இருப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

சீறும் ஸ்ரீகாந்தா சோடாப் போத்தல் போல அடங்கி விடுவாரா அல்லது கூட்டமைப்பையே அடக்கித்திருத்துவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இன்றைய முடிவைப் பார்த்த பிறகு - அதுவும் அந்த முடிவை சுமந்திரனே அறிவித்தமையைப் பார்த்த பின்னர் - எனக்கு ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.

அதனை சுமந்திரனிடமே கேட்க வேண்டும் என்று தேன்றியது. ஆனால் உடனடியாகக் கேட்க வாய்ப்புக் கிட்டவில்லை. இந்தப் பத்தி ஊடாகக் கேட்டால் இன்னும் நல்லது என்று தோன்றியது. அதனால் குறிப்பிடுகிறேன்.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டித் தமிழர்களின் முடிவைத் தீர்மானிப்பதற்காக ஐந்து தமிழ்க் கட்சிகளும் கடந்த வாரம் (30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடிய போது, தென்னிலங்கைப் பிரதான கட்சிகளின் அனைத்துத் தரப்பினரதும் தேர்தல் விஞ்ஞாபனம் வரவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டது. வந்த பின்னர் - அவற்றைப் பரிசீலித்த பின்னர் - முடிவு எடுக்கலாம் எனவும் கூறப்பட்டது.

இந்த ஐந்து கட்சிகள், அதற்கு முன்னர் ஆறு கட்சிகளாக வந்த போது, அங்கு வந்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரிடம் சுமந்திரன் தரப்பில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

*"நீங்கள்தான் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற ஒரு முடிவை எடுத்து அறிவித்து விட்டீர்களே. பிறகு ஏன் இங்கு வருகின்றீர்கள்?"* - என்று கேட்கப்பட்டது.

அதேபோன்று, கடந்த 30ஆம் திகதி கூட்டத்துக்கு வந்த தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகளிடமும் ஒரு கேள்வி சுமந்திரனால் எழுப்பப்பட்டது.

*"வாக்களிப்பது தொடர்பாக ஒரு முடிவை எடுத்து உங்கள் கட்சி அறிவித்து விட்டதே! பிறகு ஏன் முடிவு எடுப்பது தொடர்பான இந்தக் கூட்டத்துக்கு நீங்கள் வருகின்றீர்கள்?"* - என்று வினவினார் சுமந்திரன்.

இந்தக் கேள்விகள் இரண்டுமே நியாயமானவைதான் என்று எனக்கு அப்போது தோன்றியது. அதனால் இக்கேள்விகள் குறித்து எனது இந்தப் பத்தியில் ஏற்கனவே பிரஸ்தாபித்திருந்தேன்.

ஐந்து கட்சி கூட்டுக் கூட்டங்களில் பிரசன்னமாகிஇருந்து, முன்னிலை வகித்து, ஒத்த முடிவை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராசாவும், சுமந்திரனும், சி.வீ.கே.சிவஞானமும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துவிட்டு, இப்போது மற்றக் கட்சிகளுடன் ஆலோசிக்காமல் - கூட்டுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்த யாழ். மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கூடத் தெரியாமல் - திடுதிப்பென தன்பாட்டில் தமிழரசு ஒரு முடிவை எடுத்து அறிவித்தமை சரியான - நேர்மையான - செயல்தானா?

கூட்டுக்கட்சிகளின் கூட்டத்தை பல்கலைக்கழக மாணவர்கள் இப்போது அழைத்தால் எந்த முகத்துடன் அதற்குப் போவீர்கள்?

நீங்கள், மற்றைய இரு கட்சியினரிடம் முன்னர் கேட்டமாதிரி *"நீங்கள்தான் ஏற்கனவே ஒரு முடிவை எடுத்து அறிவித்து விட்டீர்களே. பிறகு ஏன் இந்தக் கூட்டத்துக்கு வருகின்றீர்கள்?"*-என்று யாராவது அடுத்த கூட்டத்தில் உங்களிடம் கேட்டால் என்ன பதில் கூறுவீர்கள்?

நானும் வாசகர்களும் சுமந்திரனின் பதிலை அறிய ஆவலாயிருக்கிறோம்.

- மின்னல் -

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படையினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்களை இலங்கை இராணுவம், மாலியின் பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள மாலி நாட்டில் இராணுவமுகாம்களின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 53 இராணுவ வீரர்கள் உயிரிழந்திருந்தனர். ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர். (ஐ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மருத்துவபீட மாணவர் விடுதியின் அறையிலிருந்து நேற்று மாலை மீட்கப்பட்டது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரைச் சேர்ந்த கியூமன் என்ற மாணவனே இவ்வாறு தனது உயிரை மாய்த்துள்ளார்.

மாணவன் தூக்கிட்டு இரண்டு நாள்கள் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று வேலணை துறையூரில் இடம்பெற்றது

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (ஐ-07)

காலைக்கதிர் Kalaikathir



## நாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவும் துரோகிதான். அவரது கால யோசனைகளின் அடிப்படையிலேயே இதனைச் செய்யவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று யாழ்ப்பாணம் வேலணையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இனப்பிரச்சினையைக் காயத்தைப் போல தொடர்ந்து வைத்திருக்க முடியாது. அதைத் தீர்த்துவிட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. எமது திட்டத்தைப் பகிரங்கமாக முன்வைத்துள்ளோம். யாருடனும் இரகசிய ஒப்பந்தங்கள் கிடையாது. எமது யோசனையை ஏற்று வடக்கிலுள்ள அரசியல் கட்சிகள் எமமுடன் இணைந்து செயலாற்றவேண்டும்.

நான் இங்கு வந்தபோது கோட்டையையும் அதன் முன்னாலுள்ள பூங்காவையும் கடந்துதான் வந்தேன். சில இளைஞர்கள் கையில் ஹெல்மெட்டை வைத்துக் கொண்டு கடலைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களும் யுவதிகளும் கரங்களை பிடித்துக் கொண்டு நடை பயின்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவைப் போலிருக்கிறது. இந்த சுதந்திரம் அண்மையில்தான் வந்தது. இதற்கு முன்னர் அப்படியான நிலைமையிருக்கவில்லை. பயம்தான் இருந்தது. அந்தப் பக்கம் போனால் யாராவது விரட்டியடித்து விடுவார்கள். இன்று யாழுக்கும் முழு நாட்டுக்கும் சுதந்திரம் இருக்கிறது. 2015 ஜனவரி 8 இல் அன்னப்பட்சிக்கு நீங்கள் புள்ளடியிட்டதால் இது ஏற்பட்டது.

இன்று யாரும் காணாமல் போவதில்லை. காரணமில்லாமல் கைது செய்யப்படுவதில்லை. துப்பாக்கியால் சுடுவதில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, ரத்துபஸ்வெலவில் தண்ணீர் கேட்டவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பயமின்றி வாழ முடிகின்றது.

இன்று அரசியல் தீர்வை தேடிக்கொண்டு நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறோம். எராளமான காணிகளை விடுவித்துள்ளோம். காணாமற் போனவர்கள் பற்றி தேடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. பெண் தலைமைத்துவம், காயமடைந்தவர்கள் மீது இப்பொழுது அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

மொட்டுக்கு நீங்கள் வாக்களித்தால் இருண்ட காலம் வரும். வெள்ளை வான் வரும். நீங்கள் அன்னத்திற்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினால் கோட்டாவும் கிடையாது. வெள்ளை வானும் கிடையாது.

அரசியல் பிரச்சினைகளை தீர்க்க நாம் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறோம். புதிய அரசமைப்பை முன்வைக்க எமக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கவில்லை. மொட்டு அதை தடுத்துவிட்டது. முதலாவதாக எமக்கு வரமொன்றை தாருங்கள், நாட்டில் பதிய அரசமைப்பை உருவாக்க, நாடாளுமன்றதைப் பலப்படுத்த. அதற்காக புதிய தேர்தல் முறையொன்றை கொண்டு வர வேண்டியுள்ளது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு பிரதமரின் ஒப்புதலுடன் காரியமற்ற அந்த அரசியலமைப்பு தேவையாக உள்ளது.

ஒற்றையாட்சிக்குள் (ஏக்கிய ராஜ்ஜிய) நாட்டுக்குள் அதிகாரத்தை பலப்படுத்த நாம் நடவடிக்கையெடுக்க வேண்டியுள்ளது. எங்களது திட்டத்தின்படி அதிகாரப்பரவலாக்கலுக்கு அல்லது புதிய அரசமைப்பிற்கு இரண்டு விடயங்கள் உள்ளன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவது. சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்வது.

நாட்டின் இறையாண்மைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத விதத்தில் அதிகாரத்தைப் பகிர்வோம். பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த காலத்திலும் கொண்டு வரப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் தீர்வுதிட்டத்தை உருவாக்குவோம். வடக்கிலும் தெற்கிலுமுள்ள எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாக அதைச் செய்வோம்.

நாட்டைக்காட்டிக்கொடுத்ததாக யாரும் சொல்ல முடியாது. நாம் முன்வைக்கவுள்ள யோசனையில் பிரேமதாஸ காலத்தில் முன்வைத்த அறிக்கையிலிருந்தவை இருக்கின்றன, சந்திரிகா காலத்தில் முன்வைத்த அறிக்கையிலிருந்தவை இருக்கின்றன, மஹிந்த காலத்தில் முன்வைத்த அறிக்கையிலிருந்தவை இருக்கின்றன. இந்த அனைத்தும் அந்த இடத்திற்கு பொருத்தானவை.

இதைச் செயற்படுத்துபவர் துரோகியென்றால், மஹிந்த ராஜபக்ஷவும் துரோகிதான். இதற்கு வெளியில் நாம் செல்ல வேண்டியதில்லை. ஆகவே மஹிந்த ராஜபக்ஷவின் யோசனைகள் தொடர்பாக கோட்டாபயவிற்கு நம்பிக்கையில்லா விட்டாலும், நாங்கள் சொல்கிறோம், அதை நிறைவேற்றுவோம் என.

அதிலிருந்துதான் எமது அரசியல் தீர்வை, தேடப் போகிறோம். அதேபோல செனட் சபையை உருவாக்கப் போகிறோம். ஒவ்வொரு மாகாணசபையிலிருந்தும் தான் செனட் சபை உறுப்பினர்கள் இருப்பார்கள். இராஜ்ஜ சபா போன்று.

அதிகார பகிர்வை நாம் சரியான முறையில் செய்யவுள்ளோம். இவற்றை நாம் மேற்கொள்ளும்போது ஏராளமான பிரச்சினைகளை தீர்க்கப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். தீர்துள்ளோம். இன்னும் சிலவற்றைத் தீர்க்க வேண்டியுள்ளது.

காணிகளைக் கையளித்தல், காணாமல் போன நபர்கள், நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் இவற்றிற்கு தீர்வு கண்டு கொடுக்கத் தயாராக உள்ளோம்.

நாம் வடக்கிலும், தெற்கிலுமுள்ள எல்லோர் சம்பந்தமாகவும் பேசித்தான் இவற்றை முன்வைத்துள்ளோம். நான் வடக்கிலுள்ள அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கிறேன், இந்த விடயங்களை ஏற்றுக்கொண்டு எங்களுடன் இணைந்து பயணிப்பதற்கு. பகிரங்கமாக இவற்றை முன்வைத்துள்ளோம். ஒளித்து மறைப்பதற்கு எதுவுமில்லை. இந்தப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். ஒரு காயத்தைபோல இதை தொடர்ந்து வைத்திருக்க முடியாது. நாங்கள் இவற்றை தீர்த்து விட்டு முன்னோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது.

எங்களது ஜனாதிபதியை தெரிவு செய்த பின்னர் நாங்கள் மீண்டும் உங்களிடம் வந்து கோரிக்கை விடுக்கவுள்ளோம், புதிய அரசமைப்பிற்கு சார்பான கட்சிகளுக்கு வாக்களித்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுத்தருமாறு. அதற்காக எமக்கு 125 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுத்தாருங்கள். அவ்வளவுதான் சொல்ல வேண்டியுள்ளது.

நாங்கள் யாருடனும் இரகசிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவில்லை. நாங்கள் யாருடனும் பகிரங்க ஒப்பந்தங்களும் செய்து கொள்ளவில்லை. எல்லோருடைய யோசனைகளையும் பெற்று அவற்றை முன்வைத்துள்ளோம். இவற்றை ஏற்றுக்கொண்டு சஜித்தை ஜனாதிபதியாக்க அன்னப்பறவைக்கு முன்னால் வாக்களிக்கக் கோருகிறேன்.

நாங்கள் பெண்களின் அரசியல் பிரச்சினையையும் தீர்க்கவுள்ளோம். இங்குள்ள பெண்களுக்கு நாடாளுமன்றத்திலோ வேறு எங்குமோ சரியான பிரதிநித்துவம் இல்லை. இப்பொழுது பிரதேசசபைகளில் 25 வீதமானவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் மாகாணசபைகளிலும் 25 வீதமான இடஒதுக்கீடு வழங்குகிறோம். விருப்பமா இல்லையா?

நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியலில் 25 வீதமான பெண்களிற்கு வழங்கவுள்ளோம். செனட் சபையிலும் 25 வீதமான பெண்களிற்கு பிரதிநித்துவம் வழங்கவுள்ளோம். ஆகவே அவரகளால் தமக்காக போராட முடியும். வடக்கிலிருந்து செல்பவர்களால் காணாமல் போனவர்கள் பற்றி கேள்வியெழுப்ப முடியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு, மொனராகலை ஆகிய பகுதிகளை இன்னும் அபிவிருத்தியடையாத பிரதேசங்களாகக் கருதி நிதியுதவியளிக்கும்படி நாம் சர்வதேசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் விவசாயத்தை நவீனப்படுத்தவுள்ளோம். வறண்ட வலயத்திலும் நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். புதிய பயிர்களை பயிரிட வேண்டும். எற்றுமதி விவசாயத்திற்கு செல்ல வேண்டும். மீன்பிடியையும் நவீனப்படுத்த வேண்டும். நீண்டதூரம் செல்லும் படகுகளை வழங்கவுள்ளோம். விவசாயம், மீன்பிடிக்காக குளிரூட்டப்பட்ட களஞ்சிய அறைகளை தனியாரின் துணையுடன் அமைக்கவுள்ளொம்.

மிகப்பெரிய பிரச்சனை இந்தியாவிலிருந்து வரும் மீனவர்கள். அவர்களை பிடித்து திருப்பியனுப்ப நடவடிக்கையெடுத்துள்ளோம். இந்திய அரசுடன் எப்போதும் இதுபற்றி பேசி வந்துள்ளோம். அவர்களிற்கு சொல்லியிருக்கிறோம் இதை தடுத்து நிறுத்துமாறு. இப்போது இந்திய அரசாங்கம், தமிழக மீனவர்களை நடுக்கடலிற்கு வருவதை தடுக்க நடவடிக்கையெடுத்துள்ளது. இப்படி ஏராளமான வேலைகளை செய்துள்ளோம்.

நாம் யாழ்ப்பாணத்திற்கு புதிய பொருளாதாரத்தை வழங்குவோம். அதுதான் சுற்றுலா பொருளாதாரம். அதற்காக இங்கு விமான நிலையமொன்று அமைத்துள்ளோம். ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படும். இந்த தீவுகளிற்கு பயணிப்பதற்கு தனியாக படகுசேவைகள் ஆரம்பிக்க முடியும். அது யாழ்ப்பாண மக்கள் செய்ய வேண்டியது. அதன்மூலம் வருமானத்தை ஈட்ட முடியும். அந்த பகுதிகளிற்கு அழைத்து சென்று காண்பித்து மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வாருங்கள். இல்லாவிட்டால் மன்னாரிற்கு அழைத்து செல்லுங்கள்.

தலைமன்னார்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம். காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்போது காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் காணி ஒதுக்கப்பட்டு தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது. பூநகரியில் புதிய நகரம் அமைக்கப்பட்டு அங்கு பல்கலைகழகம், உயர்கல்வி நிறுவனம் அமைக்கப்படும்.

இப்பொழுது வடக்கிற்கு இரண்டு பல்கலைகழகங்கள் உள்ளன. யாழ், வவுனியா பல்கலைகழகங்களுடன் மேலும் பல்கலைகழகங்கள் அமைக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வுடன் வடக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இதனை தீர்த்தவுடன் யாழ்ப்பாணமும், வடக்கும் ஏனைய பகுதிகளை போல விரைவில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அவற்றை மேற்கொள்ள அன்னப்பறவையின் முன்னால் புள்ளடியிட கேட்டுக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த, சிங்கள ஆட்சியை நிறுவுவேன் எனக் கூறிய சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை ரெலோ எடுக்காது எனப் பொறுப்புடன் கூறுகிறேன். இது விடயத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் முடிவு எங்களைக் கட்டுப்படுத்தாது. நாம் அதை ஏற்கவும் மாட்டோம் என்று அவர் உறுதிபடக்கூறினார்.

தாங்கள் ஒரு கட்சியாகக் கூடி தீர்மானம் எடுத்து பகிரங்கப்படுத்தி அதை அறிவித்துவிட்டு வந்து, அதனைக் கூட்டமைப்புத் தீர்மானமாகப் பிரகடனப்படுத்துவது எனக் கேட்பது எப்படிச் சரியாகும்? இப்படித்தானா கட்சிகள் கூட்டுச் சேர்ந்து அரசியல் செய்வது? இதுதான் கூட்டமைப்புக்கான அரசியல் தர்மமா? சம்பந்தன் போன்ற மூத்த அரசியல் தலைவர்களுக்கு இது தெரியாதா? – என்றெல்லாம் சீற்றத்துடன் அவர் கேள்வி எழுப்பினார்.

தங்கள்கட்சியின்தீர்மானத்தை பகிரங்கமாக அறிவித்துவிட்டு கூட்டமைப்பின் ஏனைய பங்காளி கட்சிகளுடன் பேச வருகின்றார்கள். பங்காளிக் கட்சிகளுடனான பேச்சில் வேறு முடிவு எடுக்கப்பட்டால் அதற்கு ஏற்ப தங்கள் கட்சியின் தீர்மானத்தை விட்டுக் கொடுத்துத் திருத்திக் கொள்ள அவர்கள் தயாரா?

அப்படித் திருத்த மாட்டார்கள். தங்களின் கட்சி எடுத்த தீர்மானத்தையே கூட்டமைப்பின் தீர்மானமாகத் திணிக்க முயல்வர். அதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம்.

எங்கள் கட்சிக்கும் (ரெலோவுக்கும்) தனித்துவம் உண்டு. சுயமரியாதை உண்டு. தனியான அரசியல் கலாசாரம் உள்ளது. நாம் அதை விட்டுக்கொடுக்க மாட்டோம்.

எனது கட்சியின் தலைமைக் குழு எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை கூடுகிறது. நாங்கள் அங்கு சுயாதீனமான முடிவு எடுப்போம்.

நிச்சயமாக அது சஜித்தை ஆதரிக்கும் முடிவாக இருக்கவே இருக்காது என்பதை முற்கூட்டியே நான் தெளிவுபடக்கூறி வைக்கிறேன்.

இன்றும் (நேற்றும்) வவுனியாவில் சஜித்தின் அமைச்சின் கீழான தொல்லியல் திணைக்களம் தமிழர்களின் பாரம்பரிய பூமியை ஆக்கிரமித்தமை மட்டுமல்லாமல் அந்தப் பிரதேசத்தின் சுதேசிய தமிழ் மக்களில் இருவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்து அட்டூழியம் பண்ணுகிறது.

அத்தகைய ஒருவரை ஆதரிக்கும் படி எமது மக்களை எங்கள் கட்சி கேட்காது. அது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு முடிவு செய்திருந்தால் அது அவர்களின் முடிவாகவே இருந்து விட்டுப் போகட்டும். அதற்கு நாம் இணங்கவும் மாட்டோம். அது எங்களைப் கட்டுப்படுத்தவும் மாட்டாது. – என்றார் ஸ்ரீகாந்தா. (உ)

## காணாமலாக்கப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாம் குறுக்குத் தெருவில் உள்ள 'வன்னி இன்' விருந்தினர் விடுதியில் கலந்துரையாடல் ஒன்றை நேற்றுக் காலை முதல் மாலை வரை மேற்கொண்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாந்தி சிறீஸ்கந்தராசா, சாள்ஸ் நிர்மலநாதன், சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், துரைரெட்ணசிங்கம், யாழ் மாநகர சபை மேயர் ஆர்னோல்ட், ஜனாதிபதிசட்டத்தரணி கே.வி.தவராசா, வடக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் கனடா கிளை பிரமுகர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வவுனியாவில் 988 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கூட்ட மண்டபத்தை முற்றுகையிட முனைந்தனர். இதன்போது கூட்ட விடுதிக்கு செல்லும் பாதையை 50 மீற்றர் தூரத்தில் வழிமறித்து பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டதுடன், அவர்களை உள்ளே செல்ல விடாது பொலிஸார் தடுத்தனர்.

இதன்போது சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரிடம் 5 கேள்விக்கள் கேட்ட வேண்டும், எமக்கு சம்பந்தன் தந்த வாக்குறுதி என்னவாச்சு?, காணாமல் போன எமது பிள்ளைகளுக்கு பதில் கூறு, பணப்பெட்டிகளுக்காக வாக்குகளைச் சிங்களவருக்கு கொடுக்காதே, தமிழனுக்கு வாக்களிக்கக் கூறு, மாவைக்கு சொகுசு வீடு; எங்களுக்கு போராட்ட வாழ்க்கை, சம்பந்தன் சுகபோகம்; நாங்கள் வீதியோரம் – எனக் கூறிக் கதறியழுதனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இருப்பினும் நீண்ட நேரமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரைச் சந்திக்க அனுமதிக்குமாறு கோரி அங்கு நின்ற போதும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

## தட்டெறிதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கானதட்டெறிதல் போட்டியில், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த வி.ஷானுஜன் 38.46 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

வட மாகாணம் சார்பாக கோலூன்றிப் பாய்தலில் புவிதரன், டக்சிதா, திசாந்த், தீபிகா, குண்டெறிதலில் மிதுன்ராஜ் ஆகியோர் தங்கப் பதக்கங்களைப் பெற்றிருந்த நிலையில், ஆறாவது வீரராக ஷானுஜன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். (ஐ)

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் சித்தார்த்தனுடனும் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடனும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும் ஏற்கனவே பேசி இணக்கமான நிலைப்பாடு ஒன்றை எட்டியுள்ளனர் என்று கூறப்பட்டது.

எனினும் ரெலோவுக்குள் இந்த முடிவை அங்கீகரிக்கச் செய்யும் சூழலை இன்னும் செல்வத்தினால் ஏற்படுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சு.க.விரைவில் சந்திரிகா 'கை'யில்?

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் சூடு பிடித்துள்ளன.

அதனை ஒட்டிய அரசியல் காய் நகர்த்தலும் வேக வேகமாக நடைபெற்று வருகின்றன. நாளொரு அணி மாறல், தினம் ஒரு பாய்ச்சல் என்று புதிய புதிய சேர்க்கைகளும், பிரிவுகளும் இடம்பெறுகின்றன.

வெளிநாடு சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாதுரங்க நாடு திரும்பி விட்டார்.

நாடு திரும்பிய கையோடு, புதிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவோடு அணி சேர்ந்து அதனை உறுதிப்படுத்தும் விசேட புரிந்துணர்வு உடன்பாட்டில் ஒப்பமும் போட்டு விட்டார்.

இதற்காக அவரையும், அவருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களையும் கட்சியை விட்டு நீக்கும் நடவடிக்கையை சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிர்வாகம் அவரை அவசரமாக ஆரம்பித்திருக்கின்றது.

இந்த அவசரத்துக்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு.

சுதந்திரக் கட்சியில் சந்திரிக்காவை தொடர்ந்து வைத்திருந்தால் இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு கட்சியின் தலைமைப் பதவியை அவர் எப்படியும் கைப்பற்றியே தீருவார் என்ற பயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்புக்கு ஏற்பட்டிருப்பதே அக்காரணம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சு.க.வில் மக்கள் செல்வாக்கும், கட்சியின் ஆதரவாளர்களின் அபிமானமும், நம்பிக்கையும் பெற்ற ஒரு தலைவரே அல்லர்.

சு.கவிலிருந்து மஹிந்த தரப்பினர் வெளியேறி, ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன என்ற புதிய கட்சியை ஆரம்பித்துக் கொண்டுபோய் விட்டார். கட்சிக்குள் இருந்த அவரது ஆதரவாளர்களும், ஆதரவுப் பிரமுகர்களும் கூட அவருக்குப் பின்னால் பொதுஜனப் பெரமுனவுக்குச் சென்று விட்டார்கள்.

இந்த நிலையில் கட்சியில் எஞ்சியுள்ளோரின் ஆதரவு, அபிமானம், செல்வாக்கைப் பெற்ற தலைவராக சந்திரிக்காவே விளங்குகின்றார்.

ஆனால், சு.கவின் யாப்பின்படி அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரே கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும் என்பது விதி.

இந்த யாப்பைப் பயன்படுத்தித்தான் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த கட்சித் தலைமைப் பதவியை 2015 முற்பகுதியில் பிடுங்கி எடுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இன்னும் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று நாள்களில் மைத்திரிபாலவின் ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிவடைகின்றது.

அதன் பின்னர், ஜனாதிபதி சந்திரிக்காவின் இப்போதைய நிலைமை போல மைத்திரிபால சிறிசேனவும் ஒரு 'முன்னாள்' ஆகி விடுவார்.

அந்தச் சமயத்தில் – முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் இருந்து – தனது பெற்றோர் ஸ்தாபித்து, வழி நடத்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை சந்திரிகா குமாரதுங்க கைப்பற்றுவது – பிடுங்கிக் கொள்வது – அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமேயல்ல.

இந்த யதார்த்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் விளங்கும்.

நாட்டின் அதி உச்ச அதிகார நிலையான ஜனாதிபதிப் பதவி வரை உயர்ந்து, அந்த அதிகார மமதையின் உச்ச நிலையில் நின்று செயற்பட்ட மைத்திரிபால சிறிசேன, இப்போது யதார்த்தப் புற நிலைகளை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்ற கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்.

தான் ஜனாதிபதிப் பதவி இழந்ததும் வெறும் தனி ஆளாகக் கட்சியின் தலைமைப் பதவியைத் தம்முடன் தக்க வைத்து நின்று பிடிப்பது காரிய சாத்தியமற்றது என்பது மைத்திரியாருக்கு நன்கு தெரியும்; விளங்கும்.

அதனால்தான் சந்திரிக்காவுக்கு முந்தித் தாம் பாயப் பார்க்கின்றார் அவர்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் வரை சந்திரிகா கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியைத் தக்க வைத்தபடி இருப்பாராயின், தேர்தல் முடிந்து, தாம் ஜனாதிபதிப் பதவியை இழந்ததும் கட்சிக்குள் சந்திரிகாவின் செல்வாக்கு எகிறி விடும் என்பது மைத்திரியாருக்கு நன்கு தெரியும்.

அதுவும் சந்திரிகா இப்போது முழு ஆதரவு வழங்கும் சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலில் வென்றால், சு.கவுக்குள்ளும் சந்திரிகாவின் ஆதரவு அலை அள்ளி, அடித்து, எகிறும் என்பதும் மைத்திரியாருக்கு நன்கு விளங்கும்.

அதனால்தான் வெள்ளம் வர முன்னர் அணை கட்ட முயல்கின்றார் அவர்.

ஜனாதிபதிப் பதவியுடன் சு.க தலைமைப் பதவியையும் தாம் வலிமையுடன் வைத்திருக்கும் இந்த பன்னிரண்டு நாள்களுக்குள் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் விசாரணைகளை முன்னெடுத்து, சந்திரிகாவைக் கட்சியை விட்டு வெளியேற்றி விட்டால், ஜனாதிபதிப் பதவியை இழந்த பின்னரும், இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகச் சுருங்கிக் கிடக்கும் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைத் தாம் தொடர்ந்து தக்க வைத்து கொண்டு ஏதேனும் அரசியல் பிழைப்பு நடத்தலாம் – காலத்தை ஓட்டலாம் – என்பது மைத்திரியாரின் கணிப்பீடு.

வலிமையான சுதந்திரக் கட்சியை உலக்கை தேய்ந்து உளிப்பிடியான மாதிரி சீர்குலைத்து குட்டிச் சுவராக்கிய மைத்திரியாரினால், ஜனாதிபதி பதவி போன பின்னர், கட்சித் தலைமை சந்திரிகாவின் காலடியில் விழுவதைத் தடுப்பது மிகக் கஷ்டமானதாகத்தான் இருக்கும்.

# சு.கவிலிருந்து சந்திரிகாவை வெளியேற்ற அவசர வியூகம் அமைக்கின்றார் மைத்திரி



கொழும்பு,நவ.04

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காப்பாளராக உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை, அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

'அபி சிறிலங்கா' (எங்கள் ஸ்ரீலங்கா) இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் சந்திரிகா குமாரதுங்க, புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளமையை அடுத்தே, அவரைக் கட்சிப் பதவிகளில் இருந்து நீக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரும் செவ்வாய்க்கிழமை (நாளை) இரவு கட்சியின் மத்திய குழுவின் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், சந்திரிகா குமாரதுங்கவைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு அவர் பரிந்துரை செய்யவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலையாகச் செயற்படவுள்ளார் என அறிவித்திருந்த மைத்திரிபால சிறிசேன, அதுவரை சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகியிருக்கப் போகிறார் எனவும் கூறிவந்தார்.

எனினும், அவர் தற்போதும் கட்சியின் செயற்பாடுகளில், ஈடுபட்டுவருகின்றார் எனக்கூறப்படுகிறது.

அதேவேளை நாளை செவ்வாய்க்கிழமை காலை, சந்திரிகாவின் ஏற்பாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் இயக்கத்தின் மாநாடு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெறவுள்ளது. இதற்கு சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு, கட்சியின் அமைப்பாளர்கள், பிரதிநிதிகளுக்கு குமார வெல்கம எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்

# ஜனாதிபதியாக மைத்திரி வியாழனன்று நாடாளுமன்றத்தில் கடைசிப் பேச்சு



கொழும்பு,நவ.04

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம், வரும் 16ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் முடிவடையலாம்.

இந்த நிலையில் இலங்கையின் ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் தனது கடைசி உரையை அவர் இந்த வாரம் நிகழ்த்தவுள்ளார்.

வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் தனது உரையில் கவனம் செலுத்தவுள்ள முக்கியமான விடயம் என்னவென்று தெரியவரவில்லை.

எனினும், மிகவும் சர்ச்சைக்குரிய, முக்கியமான உரையை அவர் நிகழ்த்துவார் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 11 பேர் காணாமலாக்கப்பட்ட சம்பவம்:

# திருமலைக் கடற்படைத் தளத்தில் விசாரணைகளை நடத்த அனுமதி

கொழும்பு, நவ.04

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரும், கடைசியாக தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும திருகோணமலை கடற்படைத் தளத்தில் விசாரணைகளை நடத்துவதற்கு, குற்ற விசாரணைப் பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

2008 -09 காலப்பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேர் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் போது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று இந்த அனுமதியை வழங்கியது.

11 பேரும், காணாமல் ஆக்கப்படுவதற்கு முன்னர், தடுத்து வைக்கப்பட்டிருந்த திருகோணமலை கடற்படை முகாமில், சட்ட மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார ஆய்வாளர்கள், குற்ற விசாரணை அதிகாரிகள் என மூன்று குழுக்களை ஆய்வு நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

வரும் 10ஆம் திகதிக்குள் இந்த ஆய்வை நடத்தி, இந்தக் குழுக்கள் குற்ற விசாரணைப் பிரிவிடம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.




**நாளை**
05.11.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: திருவேணம் முழுவதும்
திதி : ஸப்தமி காலை 6.27
இராகுகாலம் : 7.34 – 9.04
சுப நேரம் : 12.04 – 1.34

# யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி புதிதாகப் பொருளாதார முயற்சி!

## வவுனியாவில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

வவுனியா, நவ. 4

வடக்கில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திப் புதிய பொருளாதார முயற்சியை ஆரம்பித்துள்ளோம். முதல் கட்டமாக விமான நிலையம் அமைத்துள்ளோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்த அவர் வர்த்தகர்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்– புதிதாக ஓர் அரசமைப்பு உருவாக்கப்படும்போது அதிகாரப் பரவலாக்கல் ஏற்படுத்தப்படும் என சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, ராஜபக்ஷ அரசுகளில் முன்வைக்கப்பட்ட ஒன்றிணைந்த நாடு எனும் கருத்துக்களை உள்ளடக்கி அதனை ஆய்வு செய்வதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

வவுனியா போன்ற பகுதிகளில் அனைத்து இனத்தவர்களும் வசிக்கிறார்கள். நாம் நினைப்பது நாட்டிலுள்ள அனைவரையும் இணைத்து அதிகாரப் பரவாலாக்கல் என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாகும். போரின் காரணமாக பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவற்றை நாங்கள் நிவர்த்தி செய்திருக்கிறோம். எஞ்சியவற்றையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். காணிகளை மீளக் கையளிப்பதுடன், காணாமற்போனோர் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்துடன் ஒருக்கிணைந்தவாறு சுயாதீனமான ஒரு குழுவை ஸ்தாபித்திருக்கிறோம். இப்போதைக்கு அவர்கள் சிறு சிறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறார்கள்.

அதேபோல அவர்களுக்கு நட்ட ஈடுவழங்கும் கால எல்லை தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகின்றது. காணாமற்போன குடும்பங்களுக்கு இருக்கக்கூடிய துயரம் எமக்கு நன்றாகத் தெரியும். அதேபோல் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவிருப்பதுடன், போரில் காயமடைந்தவர்கள் தொடர்பிலும் நாம் கவனமெடுத்து வருகிறோம். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று பயமில்லாத, அச்சமில்லாத, சட்டத்தின் மூலம் செயற்படுகின்ற ஒரு சமூகம் காணப்படுகின்றது. இவற்றை நாம் பாதுகாத்துக் கொண்டு முன்செல்ல வேண்டும். முக்கியமாக இங்கு கேட்பது வடக்குக்கு நீங்கள் என்ன செய்ய போகின்றீர்கள் என்று. வடக்கை அபிவிருத்தி செய்யத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்பதைத் தெரிவிக்கிறேன். இலங்கையை அதிகூடிய மத்தியதர வருமானம் கொண்ட நாடாக மாற்றுவதே எமது நோக்கம். வன்னியில் விவசாய, மீன்பிடித் துறைகளை நவீனமயப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். நெல் மற்றும் தென்னை, கால்நடை வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதுடன், நாட்டின் வரட்சியான பகுதிகளிலும் உணவு உற்பத்தியை அதிகரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளவுளோம். அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

புதிய ஒரு பொருளாதார முறைமையை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கிறோம். அதற்காக விமான நிலையத்தை நாம் அங்கு திறந்து வைத்திருக்கிறோம். அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கும். மன்னார் மற்றும் பூநகரி, வடமராட்சி போன்ற பகுதிகளில் சுற்றுலா வலயத்தை ஸ்தாபித்திருக்கிறோம். நிலாவெளியில் இருந்து வடக்கு நோக்கி சுற்றுலாப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறோம்.

இதன் மூலம் சுற்றுலா மற்றும் வர்த்தகத் துறையின் ஒரு கேந்திர நிலையமாக வவுனியா மாற்றி அமைக்கப்படும் –என்றார். (ஐ-100)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**
மல்லாகம் ஒரு பகுதி, அளவெட்டி பிரதேசம், பன்னாலை, மல்லாகம் நீதிமன்ற கட்டடத் தொகுதி, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும், –

**வவுனியா பிரதேசத்தில் -**
ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, சாந்தசோலை, யுனியன் அலோயன்ஸ், Senok, ராஜ் வலைத்தொழிற்சாலை, AMP Ceylon, ஓமந்தை தொழில்நுட்பகல்லூரி ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**
உயிர்த்தரசங்குளம், செமம்ண்தீவு, ஆத்திக்குளி, செம்மண்தீவு நீர்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## 1.7 கோடி வாக்குச்சீட்டுகள் தயார்!

கொழும்பு, நவ. 04

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

சுமார் ஒரு கோடி 70 லட்சம் உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டிருக்கின்றன எனவும் இவை தற்போது ஒப்பு நோக்கப்பட்டு வருகின்றன எனவும் அரச அச்சகப் பிரிவின் முதல்வர் திருமதி.கங்கானி கல்பனாலியனகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 3 தினங்களில் இவை தேர்தல் ஆணைக் குழுவிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பேஸ்புக் விருந்து; 100 பேர் கைது!

கொழும்பு, நவ. 04

பேஸ்புக் நண்பர்கள் ஒழுங்கு செய்த கேளிக்கை விருந்துபசாரம் ஒன்று தெஹிவளையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன் தினம் இரவு நடந்தது.

அங்கு திடீர் சோதனை நடத்திய பொலிஸார் போதைப்பொருள்களுடன் 100 பேரைக் கைது செய்தனர்.

18 வயது முதல் 48 வயதுக்கு உட்பட்ட இவர்களில் 17 பெண்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# நாட்டைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார் கோட்டாபய

## கூறுகின்றார் கெஹலிய



கொழும்பு, நவ. 04

நாட்டைச்சிறந்தமுறையில் கட்டியெழுப்புவது குறித்தே கோட்டாபய ராஜபக்ஷ அதிகம் சிந்திக்கிறாரென நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஒரு மோதல் ஏற்பட்டு, இதன் விளைவாகக்குடிமக்கள் அநாதைகளாக மாறினர்.

அதாவது, இந்த அரசு நாட்டையும் மக்களையும் கவனத்திற்கொள்ளாமலேயே அதிக செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

ஆனால், எமது ஜனாதிபதிவேட்பாளர் கோட்டாபய, நாட்டின் மீதும் மக்கள் மீதும் மிகவும் அக்கறை கொண்டவர்.

நாட்டைப்பற்றியே அதிகம் சிந்திப்பவர். அத்துடன் ஏனைய வேட்பாளர்களுக்கு அவதூறு செய்யாமல், தனது தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார் –என்றார். (ஐ)

# ராஜபக்ஷ குடும்பம் ஜனாதிபதியாவதற்காக தீட்டிய திட்டமே ஏப்ரல் குண்டுத் தாக்குதல்!

## இராஜாங்க அமைச்சர் அமீர் அலி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 04

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தினர் வெற்றி பெறுவதற்காக சஹ்ரான் எனும் குண்டுதாரியைப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களைப் பிரித்து, முஸ்லிம்களை ஓரங்கட்டி, தமிழ் கிறிஸ்தவ மக்களை அவர்கள் பக்கமெடுத்து – அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்காகத் தீட்டிய திட்டம்தான் ஏப்ரல் குண்டுத்தாக்குதலாகும் என்று விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாஸவை ஆதரித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாழைச்சேனையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் 11ஆயிரம் பேர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இருக்கின்றார்கள். 119 தடவைகள் சஹ்ரானுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் அவரைப் பிடிக்கவில்லை. எங்களுக்கும், உங்களுக்குச் சிறிய பிரச்சினை என்றால் எத்தனை தடவை பொலிஸார், புலனாய்வுத்துறையினர் தேடிவருவார்கள். ஆனால் இந்த சஹ்ரானைத் தேடவில்லை. ஏனென்றால் சஹ்ரான் இருந்தது அவர்களுடைய பாதுகாப்பில்தான்.

அவர்கள் முஸ்லிம்கள் எல்லோரையும் பயங்கரவாதிகளாக காட்டப் பார்த்தார்கள், கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த முஸ்லீம்களையும் பயங்கரவாதிகளென்று வேண்டுமென்றே அவர்கள் அடையாளப்படுத்தினார்கள். இந்தத் தேர்தலிலே அவர்கள் அமைத்த வியூகம் இதுதான்.

இம்முறை தேர்தலில் வெல்லுவதாக இருந்தால் முஸ்லிம்கள் எமக்கு வாக்களிக்கமாட்டார்கள், அவர்களைத் தள்ளி வைப்பதற்கான ஒரு தந்திரோபாயம் தான் இவ்வாறான நாடகமாகும். தமிழ், கிறிஸ்தவ மக்களிடத்திலிருந்தும் இந்த முஸ்லிம் சமூகத்தைப் பிரிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் திட்டமிட்டுக் கொண்ட சதிதான் இவை. சிறுபான்மை மக்களை தள்ளி வைத்துவிட்டு இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி வரமுடியாது எனும் உண்மையை இந்த ராஜபக்ஷ குடும்பத்திற்குச் சொல்லி அவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும் – என்றார். (ஐ)

# இந்தியாவின் முக்கிய நகரங்கள் பலவற்றில் தற்கொலைத் தாக்குதல்கள் நடக்கலாமாம்

## அரசுக்கு உளவுத்துறை எச்சரிக்கை

டெல்லி,நவ.04

ஜெய்ஷ் – இ – முகமது, லஷ்கர் இ தொய்பா போன்ற தீவிரவாத இயக்கங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் தற்கொலைப்படைத் தாக்குதலில் ஈடுபட உள்ளன என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜம்மு – காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவை கடந்த ஒகஸ்டு 5 ஆம் திகதி மத்திய அரசு ரத்துச் செய்து அறிவித்தது.

இதன்பின்பு இந்தியா மீது பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து அத்துமீறித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது என இந்தியா குற்றம் சுமத்துகின்றது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே கடந்த



2003 ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு மற்றும் சர்வதேச எல்லை பகுதியில் அமைதி மற்றும் கட்டுப்பாடு நீடிக்க செய்ய இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த புரிந்துணர்தலை கடைப்பிடிக்கும்படி தொடர்ந்து இந்தியா அந்நாட்டுக்கு வலியுறுத்தி வருகிறது. ஆனால், பாகிஸ்தான் தொடர்ந்து இதனை மீறி வருகிறது. இதில் சில நேரங்களில் சாதாரண ஆயுதங்களை கொண்டும், சில நேரங்களில் பெரிய வகை ஆயுதங்களை கொண்டும் தாக்குதல் நடத்துகிறது. இதற்கு இந்திய தரப்பில் கடுமையான பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரில் இயல்புநிலை திரும்புவதைத் தடுக்க ஜெய்ஷ் – இ – முகமது, லஷ்கர்இ தொய்பா போன்ற தீவிரவாத இயக்கங்கள் தாக்குதல்கள் நிகழ்த்த திட்டமிட்டுள்ளன என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

லஷ்கர் இ தொய்பாவின் தளபதியான அபு உசாயில் இந்தியா விரைவில் மிகப்பெரிய தற்கொலைப்படைத் தாக்குதலை சந்திக்க உள்ளதாக மிரட்டல் விடுத்துள்ளார் எனவும் –

இதற்காகத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் பஹாவல்புரில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் – மசூத் அசார், அவனது சகோதரன் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் பலர் அங்கு திரண்டிருக்கின்றனர் எனவும் –

உளவுத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உளவுத்துறையின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து முக்கிய நகரங்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விமான நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மக்கள் குவியும் இடங்களில் தீவிர கண்காணிப்பும் சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# நிலவில் தரையிறங்கும் முயற்சியில் திரும்பவும் குதிக்கின்றது இந்தியா!

நிலவின் தென் துருவத்தில் மெல்லத் தரை இறங்க மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும் என டெல்லி ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் பேசிய 'இஸ்ரோ' தலைவர் கே.சிவன் கூறினார்.

"நீங்கள் அனைவரும் சந்திரயான் – 2 திட்டத்தை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தொழில்நுட்பத்தை பொறுத்தமட்டில், விக்ரம் லாண்டரை மெல்ல தரை இறங்க வைக்க முடியாமல் போய் விட்டது. ஆனால் மற்றபடி, நிலவின் மேற்பரப்பில் இருந்து 300 மீற்றர் தொலைவுவரை எல்லா அமைப்புகளும் சரியாகத்தான் இயங்கின" – என்று கூறினார்.



மேலும், எதிர்காலத்தில் நிலவில் மெல்ல தரை இறங்க ஏற்ற வகையில் எல்லாவற்றையும் சரியாக அமைக்க மிகவும் மதிப்புவாய்ந்த தரவுகள் இருக்கின்றன. இஸ்ரோ எதிர்காலத்தில் தனது முழு அனுபவத்தையும், அறிவையும், தொழில்நுட்ப வலிமையையும் இதில் காட்டும் என்ற உறுதியை அளிக்கிறேன் என்றும் கூறினார்.

நிலவின் தென் துருவத்தில் தரை இறங்க மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்படுமா? என கே.சிவனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் பதில் அளிக்கும்போது, "நிச்சயமாக முயற்சிப்போம். சந்திரயான் – 2 உடன் கதை முடிந்து விடவில்லை" – என குறிப்பிட்டார்.

கே.சிவன் தொடர்ந்து கூறும்போது எதிர்கால திட்டங்களை பட்டியலிட்டார். அப்போது அவர், நாங்கள் சூரியனை ஆராய்ச்சி செய்வதற்கு 'ஆதித்யா எல் 1' திட்டம் வைத்திருக்கிறோம். விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டத்தை வைத்துள்ளோம். இனி வரும் மாதங்களில், அதிக எண்ணிக்கையிலான மேம்படுத்தப்பட்ட செயற்கை கோள்களை செலுத்துவதற்கு திட்டமிட்டு வருகிறோம் என்று கூறினார்.

மேலும், சிறிய ரக செயற்கைகோள்களை செலுத்துவதற்கான ராக்கெட்டை முதல்முறையாக டிசம்பர் அல்லது ஜனவரியில் செலுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். 200 தொன் எடை கொண்ட பகுதியளவு கிரையோ என்ஜின் சோதனையை விரைவில் தொடங்கி விடலாம் என எதிர்பார்க்கிறோம்.

செல்போன்களுக்கான 'நேவிகேசன் சிக்னல்'களை (இடத்தை சுட்டிக்காட்டும் சமிக்ஞைகள்) வழங்குவதற்கான பணியை தொடங்க உள்ளோம். இது சமூகத்தின் தேவைகளுக்காக ஏராளமான பயன்பாடுகளை உருவாக்குவதற்கான பாதையைத் திறக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக டெல்லி ஐ.ஐ.டியில் விண்வெளி தொழில்நுட்ப பிரிவை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கே. சிவன் கையெழுத்திட்டார்.

# பிகில்' திரைப்படத்துக்காக ஜெயிலில்!

## கண்ணீரும், கம்பலையுமாக பெற்றோர்: கம்முனு அடங்கி, அமைதி பேணுகிறார் நடிகர் விஜய்



கிருஷ்ணகிரி, நவ.04

'பிகில்' படத்திற்காக பொது சொத்துக்களை சேதப்படுத்தினர் என ஏற்கனவே 32 விஜய் ரசிகர்கள் கைது செய்யப்பட்டு, கம்பி எண்ணி வருகின்றனர். இது தொடர்பாக சனியன்று்றும் 18 பேர் கைது செய்யட்டனர்.

தங்கள் பிள்ளைகள் சிறை செல்வதை கண்ட இவர்களது பெற்றோர் கண்ணீரும், கம்பலையுமாக போலீஸ் நிலையத்துக்கும் நீதிமன்றத்துக்கும் அலைந்துகொண்டு இருக்கின்றனர்.

விஜய் நடித்து கடந்த 25 ஆம் திகதி வெளியான படம் பிகில்'. இப்படத்தின் சிறப்பு காட்சிக்காக ஒரு போராட்டம் நடந்து, இறுதியில் அரசு அனுமதித்தது. கிருஷ்ணகிரியில் இப்படத்தின் சிறப்பு காட்சி திரையிட தாமதமாவதாக கூறி விஜய் ரசிகர்கள் சிலர் அந்த பகுதியில் இருந்த பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தி ரகளையில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக பொலிஸார் ஏற்கனவே 32 பேரைக் கைது செய்தனர். இப்போது மேலும் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் சிறுவர்கள்.

18 பேரையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவர்களில் 7 பேர் சிறுவர் சீர்த்திருத்த பள்ளிக்கும், 11 பேர் விளக்கமறியலுக்கும் அனுப்பப்பட்டனர்.

ஒரு நடிகரின் படத்தை பார்ப்பதற்காக இப்படி ரகளைகளை செய்து, தங்கள் பிள்ளைகள் சிறைக்கு செல்வதை பார்த்த பெற்றோர்கள் பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்ற வாசலின் முன் சோகத்துடனும், கண்ணீரும், கம்பலையுமாக நின்றிருந்தனர். இன்னும் சிலரோ தங்கள் முகத்தை வெளியே காட்டாத அளவுக்கு மூடியபடி சென்றனர்.

சினிமா என்பது வெறும் பொழுது போக்கு. ஒரு காட்சி இல்லாவிட்டால் அடுத்த காட்சி. இதற்குப் போய் பொது சொத்துக்களைச் சேதப்படுத்தி, இப்படி வாழ்க்கையையும் வீணாக்கி, பெற்றோரையும் கலங்க வைக்கும் இது போன்ற ரசிகர்களை என்னவென்று சொல்வது?

சரி, ரசிகர்கள்தான் இப்படி இருக்கிறார்கள் என்றால் இந்த விவகாரத்தில் நடிகர் விஜய், இதுவரை வாய்திறக்கவே இல்லை.



'பனர் விவகாரத்தில், என் ரசிகர்கள் மீது கை வைக்காதீர்கள். நான் சும்மா இருக்க மாட்டேன்" என்கிற ரீதியில் பிகில் பட இசை வெளியீட்டில் பேசிய விஜய், தன் ரசிகர்களை இது போன்று செய்யாதீர்கள் எனக் கண்டிக்கவில்லை. ஓர் அறிக்கை கூட விடவில்லை. படம் வெளியாகும் போது மட்டும் அரசியல் பேசிவிட்டு, அதையை படத்திற்கு ஒரு பரபரப்பாக்கி, விளம்பரமும் தேடி கொடுத்துவிட்டு கம்னு, உம்முனு, ஜம்முனு' இருந்துவிட்டார்.

# தன் தொலைபேசி ஒட்டுக்கேட்கப்படுவதாக மேற்கு வங்காள முதல்வர் மம்தா பாய்ச்சல்!

## மத்திய அரசு மீது அவர் குற்றச்சாட்டு



கொல்கத்தா,நவ.04

இந்திய மத்திய அரசு தனது தொலைப்பேசிப் பேச்சுக்களை ஒட்டுக் கேட்டதாகவும், அதற்கு தன்னிடம் ஆதாரம் உள்ளதாகவும் மேற்குவங்காள முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டி உள்ளார்.

சமீபத்தில் இந்தியாவில் உள்ள பலரின் வாட்ஸ்ஆப் தகவல்கள், இஸ்ரேல் நிறுவனத்தின் என்.எஸ்.ஓ. மூலம் உளவு பார்க்கப்பட்டதாக வாட்ஸ்ஆப் நிறுவனம் கூறி இருந்தது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மம்தா –

இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பிறகு முக்கியஸ்தர்களை மத்திய அரசு உளவு பார்த்துள்ளது. இஸ்ரேலிடம் இருந்து என்.எஸ்.ஓ. கருவியை பெற்று, மத்திய அரசு எனது தொலைப்பேசி பேச்சுக்களை ஒட்டுக்கேட்டுள்ளது. அதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. இது மிகவும் தவறானது. வாட்ஸ்ஆப் பாதுகாப்பானதுதான். ஆனால் அதுவே இப்போது உங்களின் பேச்சுக்களையும், தகவல்களையும் உளவுகிறது. தரைத் தொலைபேசி இணைப்பு, மொபைல்போன், வாட்ஸ்ஆப் தகவல் என எதுவும் பாதுகாப்பானது அல்ல. அனைத்தும் உளவு பார்க்கப்படுகின்றன என்றால் அது தனியுரிமையை பாதிப்பதாகும். பிரதமர் இந்த விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ஒன்று அல்லது 2 மாநில அரசுகளுக்கு இந்த விவகாரத்தில் தொடர்பு உள்ளது. இப்போது அவர்கள் பெயரை என்னால் கூற முடியாது. ஆனால் அவர்கள் யார் என எனக்குத்தெரியும்.


என்.எஸ்.ஓ. கருவியால் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தொலைபேசி பேச்சுக்களையும் ஒட்டுக் கேட்க முடியும். இது குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்றத்தை நாட உள்ளோம். எங்களுக்கு உச்ச நீதிமன்றம் மீது மீது நம்பிக்கை உள்ளது. உச்ச நீதிமன்றத்தை நாங்கள் மதிக்கிறோம். அனைத்தையும் இழந்த பிறகும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் மீதுதான் நம்பிக்கை உள்ளது. – என்றார்.

காலைக்கதிர்
Kalaikathir



# மாலியில் ராணுவச் சாவடியின் மீது பயங்கரத் தாக்குதல்; 50 பேர் சாவு!

## ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்கின்றது







பமாக்கோ,நவ.04

மாலியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பிரான்ஸ் இராணுவ வீரர் உள்பட 50 பேர் பலியான சம்பவத்திற்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில் மத அடிப்படையிலான தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். நாசவேலைகளில் ஈடுபடும் அவர்களை ஒழித்துக் கட்ட முடியாமல் இராணுவம் திணறி வருகிறது.

இந்த நிலையில் அந்த நாட்டில் மேனகா பிராந்தியத்தில், இன்தெலிமான் என்ற இடத்தில் இராணுவச் சாவடி ஒன்று செயல்பட்டு வந்தது. இது முழுக்க முழுக்க இராணுவ வீரர்களின் கட் டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தச்சாவடியைகடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் அதிரடியாக முற்றுகையிட்டு, துப்பாக்கியால் சுட்டும், குண்டுகளை வெடித்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடத்தினர்.

இந்தத் திடீர் தாக்குதலில் 49 வீரர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதல் குறித்த தகவல் அறிந்ததும், அங்கு அந்த நாட்டு அரசு கூடுதல் படைகளை அனுப்பி வைத்தது. இதன்பின்பு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப் பட்டது. இந்த தாக்குதலில் 20 வீரர்கள் தப்பி உள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இந்நிலையில், நேற்று நடந்த சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சேதமடைந்தது.

இதில், பிரான்ஸ் நாட்டு இராணுவ வீரர் ரோனன் பாயின்டியூ (வயது 24) என்பவர் கொல்லப்பட்டார்.

அந்த நாட்டில் இதுவரை இல்லாத வகையில் சமீபத்தில் நடந்துள்ள மிக பெரிய பயங்கர வாத தாக்குதல்களுக்கு ஐ.எஸ். அமைப்பு சனி இரவு பொறுப் பேற்று கொண்டுள்ளது.

பிரான்ஸ் வீரர் மறைவுக்கு அந்நாட்டு அதிபர் மேக்ரான் அஞ்சலி செலுத்தினார். தீவிர வாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வரும் பிரான்ஸ் மற்றும் ஆப்பிரிக்கப் படைகளை ஒற்றுமையுடன் செயல்படும்படியும் அவர் கூறியுள்ளார்.

# காடுகளைக் காக்கப் போராடி வந்த இயற்கை ஆர்வலர் சுட்டுக் கொலை

## பிரேசிலின் அமேசான் காடுகளில் துயரச் சம்பவம்



பிரேசிலில் உள்ள அமேசான் காடுகளில் நிலத்துக்காகப் போராடிவந்த இளம் பழங்குடி செயற்பாட்டாளர் ஒருவர் சட்ட விரோதமாக செயல்படும் மரம் வெட்டும் கும்பலால் சுட்டுக் கொலை செய்யப் பட்டார். இதுதவிர, மேலும் ஒருவரை இந்த கும்பல் காயப்படுத்தியுள்ளது.

மரான்ஹு மாகாணத்தில் உள்ள அராரிபோ என்ற பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் பழங்குடி பிரிவைச் சேர்ந்த பௌலோ பௌலினோ குவாஜஜரா வேட்டையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது தாக்குதலுக்கு உள்ளாகி தலையில் சுடப்பட்டார்.

அராரிபோ வனப்பகுதியில் சட்ட விரோதமாக மரம் வெட்டுபவர்களை தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'கார்டியன்ஸ் ஒவ் தி ஃபாரஸ்ட்' என்ற வன பாதுகாப்பு குழுவில் பௌலோ உறுப்பினராக இருந்துள்ளார்.

பௌலோவின் கொலை அமேசான் காடுகளை பாதுகாக்க போராடும் பாதுகாவலர்களுக்கு எதிராக அதிகரிக்கும் வன்முறை குறித்த கவலைகளை உருவாக்கியுள்ளது.

'சேர்வைவல் இண்டர்நேஷனல்' என்ற தன்னார்வ நிறுவனத்தின் கூற்றுப்படி, இதற்கு முன்னர் அமேசான் காடுகளைப் பாதுகாக்கும் பணி யில் ஈடுபட்டிருந்த குறைந்தது மூன்று பேர் தங்கள் குடும்பத்தாருடன் சேர்த்துக் கொல்லப்பட்டனர்.

பூர்வகுடி மக்களின் நலனுக்காக இயங்கிய அதிகாரி ஒருவர் கடந்த செப்டம்பர் மாதம் டபடிங்கா நகரில் கொலை செய்யப்பட்டார்.


பௌலோவின் மரணத்தை குறித்து விசாரித்து வருவதாக தெரிவித்துள்ள பிரேசிலின் நீதித் துறை அமைச்சர் செர்ஜியோ மோரோ, இந்த கொலையில் சம் பந்தப்பட் டவர்களை நீதிக்கு முன்னால் நிச்சயம் நிறுத்துவோம், என்று ட்வீட் செய்துள்ளார்.

அராரிபோ வனப்பகுதிக்குள் சட்ட விரோதமாக மரம் வெட்ட நுழைந்தவர்கள் நடத்திய திடீர் தாக்குதலில் பௌலோவின் தலையில் குண்டு பாய்ந்தது என்று பிரேசில் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பௌலோவுடன் இருந்த மற்றொரு பூர்வகுடிமகனும் இந்தத் தாக்குதலில் காயம் அடைந்துள்ளார்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து நடந்த துப்பாக்கிச்சூட்டில் மரக் கடத்தல்காரர் ஒருவரும் கொல்லப்பட்டார் எனப் பிரேசில் பொலிஸார் கூறுகின்றனர்.

சட்டவிரோத மர கடத்தல்காரர்களின் தேடுதல் வேட்டையில் துப்பாக்கியுடன் பௌலோ



# ரஷ்ய எண்ணெய்க் கப்பலில் வெடி விபத்து; இருவர் சாவு!

மொஸ்கோ,நவ.04

ரஷ்யாவில் எண்ணெய் கப்பலில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 2 பேர் பலியாகினர்.



ரஷ்யாவின் நகோட்கா துறைமுகத்தில் நான்காவது முனையத்தில் ஜாலிவ் அமெரிக்கா என்ற எண்ணெய் கப்பலில் நேற்று முன்தினம் காலை எரிவாயு மற்றும் வாயு கலவை பலத்த சத்தத்துடன் வெடித்தது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. மாலுமிகள் அலறினர். இந்த வெடிவிபத்தில் 3 மாலுமிகள் கடலில் தூக்கி வீசப்பட்டனர். அவர்களில் 2 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. எஞ்சிய ஒருவர் ஆழ் கடலுக்குள் போய் விட்டார். அவரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் பல கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

தேடப்படும் மாலுமியும் பெரும்பாலும் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தப்படுகிறது.

இந்தத் தகவல்களை மத்திய கடல் மற்றும் நதி போக்குவரத்து செய்தி தொடர்பாளர், 'ஸ்புட்னிக்' செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

## செய்தித் துளிகள்

* உலக வல்லரசுகளில் முன்னணியில் உள்ள அமெரிக்க அரசுக்கு 23 டிரில்லியன் டொலர் (இலங்கை நாணய மதிப்புப்படி சுமார் ரூ.4,140 லட்சம் கோடி) கடன்கள் உள்ளதாக அந்த நாட்டின் நிதித்துறை அமைச்சக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதற்கு தினமும் 100 கோடி டொலர் வட்டியாக தரப்படுகிறதாம்.

* ஆப்கானிஸ்தானில் டக்கார் மாகாணத்தில் ஒரு பஸ், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடிக் கவிழ்ந்தது. இந்தக் கோர விபத்தில் 6 பேர் பலியாகினர். 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

* ஹவானா நகரம் தவிர்த்து கியூபா நாட்டின் பிற நகரங்களுக்கு தனது நாட்டு விமானங்கள் பறக்க தடை விதித்து அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. இதனால் வர்த்தகம் பாதிக்கும், இந்த தடையை விலக்கிக் கொள்ள வேண்டும் என 11 செனட் சபை எம்.பி.க்கள், டிரம்ப் நிர்வாகத்தை வலியுறுத்தி உள்ளனர். இவர்கள் அனைவரும் ஜனநாயக கட்சியினர்.

* அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையேயான வர்த்தக பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரப் பேச்சு நடத்தப்படுகிறது. முதல் கட்ட ஒப்பந்தம், அயோவாவில் வைத்து விரைவில் கையெழுத்தாகும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

* இங்கிலாந்து நாட்டில் எஸ்ஸெக்ஸ் நகரில் ஒரு கெண்டெய்னர் லொறியில் இருந்து 39 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

அவர்கள் சீனர்கள் என முதலில் தகவல்கள் வெளியாகின. இப்போது அவர்கள் வியட்நாமியர்கள் என உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வியட்நாம் அரசுடன் இங்கிலாந்து பொலிஸார் பேசி வருகின்றனர்.

# பிரதான வேட்பாளர்கள் இருவரும் தமிழருக்கு தரும் சகாயங்கள்!



உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டவர்கள் மீள்குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் உள்ளிட்டவை குறித்து பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் 16ஆம் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள பின்னணியில், 35 வேட்பாளர்கள் இந்த தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றனர்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் புதிய ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் தொடர்பில் நாட்டில் அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது.

நாட்டை ஆட்சி செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி சார்பில் சஜித் பிரேமதாஸவும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் களமிறங்கியுள்ளனர்.

இந்த இரண்டு வேட்பாளர்களும் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுள்ள நிலையில், அந்த தேர்தல் அறிக்கைகள் ஊடாக தமிழர்களுக்கு என்று சில தீர்வுகள் மற்றும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள், தமது தேர்தல் அறிக்கையில் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியுள்ளன.

அத்துடன், இரண்டு தரப்பினரும் இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றின் அவசியத்தை வெவ்வெறு விதத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து முன்னோக்கி நகர்வோம் என சஜித் பிரேமதாஸ கூறி யுள்ள அதேவேளை, 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு புதிய அரசமைப்பை கொண்டுவருவோம் என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதாரம், புத்தாக்கம், முயற்சியாண்மை, நவீன தொழில்நுட்பம், உயர்கல்வி, முன்பள்ளி, சமூக சமச்சீரான பொருளாதாரம், பெண்களுக்கு முன்னுரிமை, ஊழல் – மோசடியற்ற ஆட்சி, அடிப்படைவாதத்திற்கு எதிரான போர், போட்டிமிக்க உலக மற்றும் உள்நாட்டு சந்தையை உருவாக்கல், போதைப் பொருளுக்கு எதிராக கடும் சட்டம், இலங்கைக்கு முன்னுரிமை, இலங்கையின் அமைவிடம், சட்டவாட்சி, சுதந்திரமான ஊடகத்துறை, வினைத்திறன் வாய்ந்த பொதுச் சேவை, போக்குவரத்து, சுகாதார சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்பு, நட்புறவுடனான வெளிநாட்டுக் கொள்கை, ஊழல் – மோசடியற்ற அரச நிர்வாகம், மக் களுக்கு பொறுப்பு கூறும் அரசமைப்பு மீள் திருத்தம், மாற்றம் கொண்ட பிரஜை – வளமான மனித வளம், மக்களை மையப்படுத்திய பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப விருத்தி, பௌதீக வள அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமைத்துவம், சட்டத்தினை மதிக்கும் ஒழுக்கமுள்ள சமூகம் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருந்து.

## கோட்டாவின் அறிவிப்பு

இந்த இருவரும் தமிழர்களுக்கு என்று அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் என்னென்ன என்று பார்க்கலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள தமிழர்களுக்கான திட்டங்கள் –

01. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் நுண்கடனினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தின் தலையீட்டில் கடன் மற்றும் விவசாயக் கடனை பெற்றுக்கொடுத்தல்.

02. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு அவர்களது வாழ்க்கையை சரியான முறையில் கொண்டு செல்வதற்கான முதலீடுகளை மேற்கொள்ளுதல்.

03. மனிதாபிமான நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரித்து வழங்குதல்.

04. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.

05. மேலதிக வருமானங்களை பெற்றுக்கொள்வதற்காக பாவனைக்கு உட்படுத்தாதுள்ள நிலங்களில் விவசாயம் செய்வதற்காக வழிவகைகள் செய்யப்படும்.

06. பெருந்தோட்டங்களில் மேலதிக கணித, விஞ்ஞானப் பாடசாலைகள் உருவாக்கப்படும்.

07. சகல வசதிகளுடனும் கூடிய குறைந்த மாடி வீட்டுத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

08. கர்ப்பணி மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தை பெற்றுக்கொடுக்கப் புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

09. மலையக இளைஞர்களின் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான பல்கலைகழக சபைபொன்று ஹட்டனில் ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நிறுவப்படும்.

10. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை திறப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்பதுடன், தோட்டத்துறையை மையப்படுத்திய கைத்தொழில் வலயமொன்றை நிறுவ நடவடிக்கையெடுத்தல்.

11. தோட்டத்துறையை அபிவிருத்தி செய்ய சிறந்த முகாமைத்துவ பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

12. இவரின் வாக்குறுதியில் மலையக புத்தி ஜீவிகளின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள தனிப் பல்கலைக்கழகம் குறித்து எவ்வித அறிவிப்புகளும் இல்லை.

13. வடக்கு கிழக்கில் அரசாங்கத்தினால் கையகப் படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. பெரிய மற்றும் நடுத்தர விவசாயங்களை மேற் கொள்வதற்காக அரசாங்கத்தின் காணிகளை குத்தகைக்கு வழங்குவதுடன், விவசாயிகளுக்கு விவசாயங்களை மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படும்.

15. வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள இளை ஞர்களுக்கு அதே மாகாணத் தில் அரச வேலைவாய்ப் புக்களை ஏற் படுத்திக் கொடுத்தல்.

16. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பொலிஸ்சேவைக்கு ஆள்கள் இணைத்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், தமிழ் மொழி அறிவு குறித்து கவனம் செலுத்தப்படும்.

17. குறித்த இரண்டு மாகாணங்களிலும் விவசாய பொருட்களை சேகரிப்பதற்கான பொருளாதார வலயங்களை நிறுவுதல்.

## சஜித்தின் அறிவிப்பு

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள தமிழர்களுக்கான திட்டங்கள்

1. தோட்டத் தமிழ் விவசாயிகளின் நிலையான வருமானத்துக்கு உத்தரவாதமளிக்க அவுட் – க்ரோவர் திட்டம் குறித்து தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்த பொறிமுறை.

2. தோட்டப் பகுதிகளில் 10 தேசிய பாடசாலைகள்.

3. கௌரவம், சமத்தும், அபிவிருத்தி, பொருளாதார பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

4. தொழில்துறை மற்றும் சேவைத் துறைக்கு மலையக இளைஞர்கள் உள்ளீர்ப்பு.

5. 7 பேர்ச் காணியுடன் தனி வீடுகள் மலையக மக்களுக்கு வழங்கப்படும்.

6. நியாயமான மற்றும் சமமான சம்பள அதிகரிப்பு.

7. பெருந்தோட்ட சுகாதாரமானது ஏனைய பகுதிகளை போன்று தரமுயர்த்தப்படும்.

8. உயர் கல்வியை மேம்படுத்த ஹைலேண்ட் பல்கலைக்கழகம் திறக்கப்படும்.

9. நாடு முழுவதும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான விசேட செயல்திட்டம்.

10. மலையக இளைஞர்களுக்கான தொழில் பயிற்சியை உறுதிப்படுத்தல்.

11. மலையக சமூக மேம்பாட்டுக்காக விசேட ஜனாதிபதி செயலணி

12. தொழில் வலயங்களும், அவற்றுடன் தொடர்புற்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களும் தோட்ட பிரதேசங்களில் இங்குள்ள இளைஞர் களுக்காக அமைக்கப்படும்.

13. தோட்டத்தொழிலாளர்களுக்கு ரூ.1500 நாளாந்த சம்பளம்.

14. நீண்டகால இடம்பெயர்வுகளினால் பாதிக்கப் பட்டவர்களின் மீள்குடியேற்றம், வீடுகள் மற்றும் வணிக மறுசீரமைப்பு ஆகியன மேற்கொள்ளப்படும்.

15. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோரை கண்டுபிடிக்கும் முயற்சி.

16. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை முழுமையாக ஆதரித்தல்.

17. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்கள் மற்றும் இழப்பீடு களை வழங்குதல்.

18. இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது.

இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கான திட்டங்கள் பல வெவ்வேறு விதத்தில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இரு வேட்பாளர்களும் பெரும்பாலும் ஒரே எண்ணத்திலான திட்டங்களையே முன்வைத்துள்ளமையை காண முடிகின்றது.

இந்த நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் இணைந்து 13 நிபந்தனைகளை வெளியிட்ட போதிலும், இந்த இரண்டு வேட்பாளர்களும் தமது தேர்தல் அறிக்கைகளில் வடக்குக் கிழக்கு தமிழ் கட்சிகளின் நிபந்தனைகள் தொடர்பில் தெளிவான பிரதிபளிப்புகளைக் காட்டவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. *

நன்றி – பி.பி.ஸி.



# மனோவிடம் வாங்கிக் கட்டினார் முன்னாள் ரெலோ எம்.பி. விநோ



கொழும்பு, நவ. 4

பேஸ்புக்கில் தன்னை விமர்சித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநோ நோகராதலிங்கத்துக்கு பேஸ்புக் ஊடாகவே பதிலடி கொடுத்தார் அமைச்சர் மனோ கணேசன்.

சஜித் பிரேமதாஸவின் வவுனியா பிரசாரக் கூட்டத்தில், அமைச்சர் ரிஷாத் பதியுதீனை, வன்னி மாவட்ட தலைவர் என்று கூறி விட்டேன் எனச் சிலர் தன்னை விமர்சிக்கின்றனர் எனவும், அமைச்சர் ரிஷாத்தை வன்னி மாவட்ட அமைச்சர் என்று சொல்லவே வந்ததாகவும், ஆனால் அதற்குப் பதில் வன்னி மாவட்டத் தலைவர் என்ற வார்த்தைப் பிரயோகத்தை செய்து பொதுவாக விளித்தது, வன்னிப் பெருநில அரசியல் சூழலில் பொருத்த மானதில்லை என்பதைத் தான் தெளிவாக உணர்கிறார் எனவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இந்த மனோ கணேசனிடம் எப்போதும் இருக்கிறது. எனவே என் சொற் பிரயோகத்தில் தவறுதலாக ஏற்பட்ட தவறுக்கு மனம் வருந்துகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது பதில் மேலும் தெரிவிக்கையில்–

வன்னி மாவட்ட முன்னாள் எம்.பி. நண்பர் விநோ, எனது உரையின் இந்த முதல் ஒரு வரியைப் பிடித்துக்கொண்டு, இது கோட்டாவுக்கு மறைமுக ஆதரவானது எனக் கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவர் என் முழு உரையையும் கேட்கவில்லையா? சமீப காலத்தில் எந்தவொரு தமிழ் அரசியல்வாதியும் விமர்சிக்காத அளவுக்கு ராஜபக்ஷ குடும்பத்தை நான் எனது வவுனியா உரையில் விமர்சித்துள்ளேன்

இதை கவனத்தில் எடுக்காமல் என் கருத்து கோட்டாவுக்கு ஆதரவானது என முட்டாள்தனமான கருத்து கூறுவதும், என் வரலாற்றை மறந்து என்னை அறிந்த இவர் இப்படிப் பேசுவதும் எனக்கு மன வருத்தத்தை தருகிறது.

இவரது கட்சியைச் சேர்ந்த ஒருவர் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார். இது நேரடியாகவே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான வாக்குகளைச் சிறுடிக்கிறது என்பதை இவரால் உணர முடியவில்லையே? அவருக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர நண்பர் விநோவின் கட்சி என்ன செய்கிறது?

இந்நிலையில், சஜித் பிரேமதாஸ அணியின் பிரதான ஒரு பங்காளி கட்சி தலைவரான என்னைப் பார்த்து இப்படி சொல்ல நண்பர் விநோவுக்கு வெட்கமில்லையா?

இனி, நண்பர் விநோவை பார்த்து நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள் என நான் கேட்கலாமா?

வன்னி பெருநிலத்தின் முல்லை, வவுனியா, மன்னார் மாவட்ட பெரும்பான்மை தமிழ் மக்கள் இன்று நிர்க்கதி நிலையில் வாழ்கிறார்கள். அநாதரவான பெண்கள், முன்னாள் போராளிகள், இடம் பெயர்ந்தவர்கள், யுத்தத்தில் அவயங்களை இழந்தவர்கள், வேலையில்லாத இளையோர் என வழி காட்டல் இல்லாமல் வன்னி பெருநில தமிழ் மக்கள் தவிக்கிறார்கள்.



இந்நிலையில், முன்னாள் எம்.பி. நண்பர் விநோ முகநூலுக்குள் ஒளிந்து அரசியல் செய்கிறார்.

சமூக ஊடகம் அவசியம்தான். நானும் இங்கே வேறு எவரையும்விட காத்திரமாக இருக்கிறேன். ஆனால் இது மட்டும் என் பணி அல்ல. இதைவிட நேரடியாக மக்கள் மத்தியில் நான் எப்போதும், எந்த வேளையிலும் இருக்கிறேன்.

பேராபத்து மீண்டு வந்து இன்றைய ஜனநாயக இடைவெளி காணாமல் போய் விடக்கூடாது என்ற ஒரேயொரு காரணமே, நாம் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து பிரசாரம் செய்வதற்கான பிரதான காரணம் ஆகும்.

இப்போதும் கூட அதிகாலையில் எழுந்து பிரச்சார கூட்டத்திற்காக கண்டி நோக்கி விரைந்து கொண்டிருக்கிறேன். கடமையாக மக்கள் பணியில் என்னை ஆழ்த்திக்கொண்டுள்ளேன்.

பலனை எதிர்பாராமல் கடமையை செய் என்ற கீதை வாசகம் மட்டுமே என் மனதில் இருக்கிறது. ஆகவே நாங்கள் ஒருவரை தூற்றாமல் மக்கள் பணி செய்வோம் – என்றுள்ளது. (ஐ)

# யாழ். நாக விகாரையில் பிரதமர் ரணில் வழிபாடு





யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை யாழ். நாகவிரையில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக வடக்குக்கு விஜயம் செய்த பிரதமர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய நேற்று யாழ். விஜயம் செய்த பிரதமர் யாழ். நகரிலுள்ள நாக விகாரைக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது நாக விகாரையின் விகாராதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த வழிபாட்டில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ – 100)

# நெடுந்தீவுக் கடற் பகுதியில் 10 இந்திய மீனவர்கள் கைது



இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 10 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்கரையின் வடக்கு கடற்பகுதியில் வைத்து, இந்த மீனவர்களைத் தாங்கள் கைது செய்தனர் என இலங்கைக் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவர்களிடம் இருந்து இரண்டு இழுவைப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

இந்த மீனவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர், மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பாணம் மீன்வள இயக்குநரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# அமெ. மிலேனியம் சவால் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தால் இரத்த ஆறு ஓடுமாம்!

## இப்படி எச்சரிக்கின்றார் உதய கம்மன்பில்ல

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்துடன் இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால், நாட்டில் இரத்த ஆறு ஓடுவதையும், நாடு தீயில் எரிவதையும் யாராலும் தடுக்க முடியாமல் போகும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில்ல எச்சரித்துள்ளார்.

அமெரிக்க மிலேனியம் சவால் நிறுவனத்துடன் இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால், இலங்கை உலக அதிகாரப்போட்டியின் மையமாக மாற்றப்பட்டு, இந்நாட்டில் இரத்த ஆறு ஓடுவதையும், தீயில் எரிவதையும் யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

இலங்கையிலுள்ள காணி உரிமையை அமெரிக்கா கொள்ளையடிப்பதற்கு வழிசமைக்கும் இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இதனை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கைச்சாத்திட அரசாங்கம் தயாராகி வருகின்றது.



இந்த ஒப்பந்தத்தினால் 480 கோடி டொலர் இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைக்கின்றதுதானே, இதனைச் செய்வதில் என்ன தவறு இருக்கின்றது எனப் பிரதமர் வினவி வருகின்றார்.

தனது தாய்க்கு விலைபேசினால், அவளை விற்பனை செய்ய யாராவது தயாராகுவார்களா என நாம் அவர்களிடம் வினவுகின்றோம். எமது இலங்கைத் தாய்க்கு விலை பேச நாம் தயாரில்லை எனப் பிரதமருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikathir





# 400 மீற்றர் தடை தாண்டலில் நசாத்கானுக்கு வெண்கலம்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட 400 மீற்றர் தடை தாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ந.மு.நசாத்கான் வெண்கலம் வென்றார்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களிற்கான 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ந.மு.நசாத்கான் 54.3 செக்கன்களில் ஓடி வெண்கலம் வென்றார்.

# பகலிரவு டெஸ்ட்டுக்கு கோஹ்லியை சம்மதிக்க வைத்தது எப்படி?

பகலிரவு டெஸ்ட் போட்டியே வேண்டாம் என்று இந்திய அணி ஒதுக்கி வந்த நிலையில், அதற்கு எப்படி அந்த அணி சம்மதித்தது, கோஹ்லியிடம் சம்மதம் வாங்க கங்குலி எடுத்துக் கொண்ட



நேரம் எவ்வளவு என்பன குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகள் பகலிரவு டெஸ்ட் போட்டியில் விளையாட ஆரம்பித்ததில், இருந்து அதன் மற்ற நாடுகளும் பகலிரவு, டெஸ்ட் போட்டி குறித்து ஆலோசித்து வருகின்றன.

அந்த வகையில், இந்தியா – பங்களாதேஷ் கொல்கத்தாவில் விளையாடவிருக்கும் டெஸ்ட் போட்டி பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறவுள்ளது, இதற்காக இந்திய அணியிடம் கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக பொறுப்பேற்றிருக்கும் கங்குலி பேசி சம்மதம் வாங்கினார்.

இது குறித்து அவர் கூறுகையில் –

இத்தனை நாள்களாக பகலிரவு டெஸ்ட் போட்டியை நாம் ஆடவில்லை என்பது எனக்கு தெரியவில்லை.

நான் கோஹ்லியை ஒரு மணி நேரம் சந்தித்தேன். என்னுடைய முதல் கேள்வியே நாம் ஏன் பகலிரவு டெஸ்ட் வைக்கக் கூடாது என்றேன். அதற்கு அவர், மூன்றே விநாடிகளில் 'ஊம், ஏன் வைக்கக் கூடாது, விளையாடுவோம்' – என்று உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் கோஹ்லிக்கு பகலிரவு டெஸ்ட் போட்டி ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

டி20 என்றால் மைதானம் நிரம்பி வழிகிறது, டெஸ்ட் கிரிக்கெட்டையும் மீண்டும் மீட்டெடுக்க வேண்டும். இந்தியாவுக்கு இது தொடக்கம் மட்டுமே. இந்தப் பகலிரவு டெஸ்ட் போட்டியையும் மேலும் விறுவிறுப்பாக்கும் என்று எதிர்பார்க்கலாம் என்று கங்குலி கூறினார்.– என்றார்.

# இந்திய அணிக்கு தேர்வாகாத தமிழக வீரர்



*சென்னை, நவ.04*

*தமிழகத்தை சேர்ந்த 29 வயதான அபினவ் முகுந்த், இந்திய அணிக்கு தேர்வாகாதமை குறித்து ஆர்.ஜே. பாலாஜி டுவிட்டரில் வருத்தம் தெரிவித்துள்ளார்.*

*2017 இல் இலங்கைக்கு எதிராக விளையாடி 2ஆவது இன்னிங்ஸில் 81 ஓட்டங்கள் எடுத்ததே அவரது கடைசி போட்டியாகும். இதற் குப் பிறகு இந்திய அணியில் விளையாடும் வாய்ப்பு முகுந்துக்குக் கிடைக்கவில்லை.*

*இது குறித்து ஆர்.ஜே. பாலாஜி டுவிட்டர் பதிவில், ஐ.பி.எல்லில் ஒவ்வொரு முறையும் யாராவது 50, 100 ஓட்டங்கள் அடித்தாலே அந்த வீரர் இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என விரும்புவோம்.*

*விஜய் ஹசாரே கிண்ணப் போட்டியில் மூன்று முறை தலா 500 ஓட்டங்கள் எடுத்த ஒரே வீரர் - அபினவ் முகுந்த் மட்டுமே.*

*இந்திய அணிக்குத் தேர்வாவதை விடுங்கள், தியோதர் கிண்ணக் போட்டிக்குக்கூட அவர் தேர்வாகவில்லை.*

*அவருக்கு 29 வயதுதான். தொடர்ந்து விளையாடி போராடுங்கள் முகுந்த்! - என்று தெரிவித்துள்ளார்.*



# இங்கிலாந்திற்கு பதிலடி கொடுத்தது நியூசிலாந்து!

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியில் நியூஸிலாந்து அணி 21 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து 177 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்துள்ளது.

இதன் காரணமாக 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடர் 1:1 என சமநிலையில் உள்ளது.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு யாழ்.வீராங்கனையான ஆஷிகா தெரிவு

தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கையின் பளுதூக்கும் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆஷிகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாமரி வர்ணகுலசூரிய தலைமையிலான இலங்கை பெண்கள் பளுதூக்குதல் அணியிலேயே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீராங்கனை ஆஷிகா இடம் பிடித்துள்ளார்.

13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி நேபாளத்தின் காட்மண்டுவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சொகுசு வாகனங்களுக்காக அரசாங்கம் புதிய வரி விதிப்பு

சொகுசு வாகனங்களுக்காக அரசாங்கம் புதிய வரி ஒன்றை விதித்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சிறிய வாகனங்களின் வரியைக் குறைத்துள்ளதாகத் தவறான செய்தி பரவி வருவதாகவும் அந்த சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட யோசனையின் கீழ் அறவிடப்பட்ட சொகுசு வாகன வரி, சிறிய ரக வாகனங்களுக்கு அறவிடப்படாது என கடந்த 29 ஆம் திகதி நிதி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுக் குறிப்பிட்டிருந்தது.

அதில், சொகுசு கார் மற்றும் ஜீப் வாகனங்களுக்கு மாத்திரமே இந்த வரி அறவிடப்படும் எனவும், சிறிய ரக வாகனங்களுக்கு அது அறவிடப்படாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேபோல், வான், தனி கெப் வாகனம், இரட்டை கெப் வாகனம் ( டபிள் கெப்) மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்களுக்கு இந்த சொகுசு வரி அறவிடப்பட மாட்டாது எனவிம் நிதி அமைச்சு அறிவித்திருந்தது.

மேலும், Toyota Vitz, Suzuki Every, Toyota Roomy, Suzuki Alto, Suzuki Baleno, Daihatsu Petrol, Honda Grace, Suzuki Wegon R, Toyota Aqua ஆகிய மாதிரி வாகனங்களுக்கும் இந்த வரி அறவிடப்படாது எனவும் நிதி அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

மேலும், Axio, Premio மற்றும் Allion மாதிரி வாகனங்களுக்கும் இந்த வரி அறவிடப்பட மாட்டாது.

எவ்வாறாயினும், அரசாங்கம் சொகுசு வாகனங்களுக்கு புதிய வரியொன்றை



அறவிட்டு அதற்குள் சிறிய ரக வாகனங்கள் அடங்காது என அறிக்கை வெளியிட்டுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

# கோட்டாபயவை ஆதரிக்க முடியாது சஜித்தான் ஓரளவு பொருத்தமானவர்

## யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,நவ.04

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை எம்மால் ஆதரிக்க முடியாது. ஒப்பீட்டளவில் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் பொருத்தமானவர்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்தறியும் கூட்டம் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது சஜித் பிரேமதாஸவையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க வேண்டும்என்று உள்ளூராட்சிச்சபைகளின் தலைவர்கள் தெரிவித்தனர். அதன்பின்னர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

கோட்டாபயவை எம்மால் ஆதரிக்க முடியாது. ஒப்பீட்டளவில் சஜித் பிரேமதாஸதான் பொருத்தமானவர். ஞாயிற்றுக்கிழமை (நேற்று)வவுனியாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடக்கும். அதில் முடிவெடுத்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாம் உத்தியோகபூர்வமாக ஓர் அறிவித்தல் விடுப்போம். அறிக்கையும் வெளியிடுவோம் – என்றார்.

# ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் மாகாண சபைத் தேர்தல்களே!

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் எதிர்பார்ப்பு



கொழும்பு,நவ.04

ஜனாதிபதி தேர்தல் முடிந்தவுடன் மாகாண சபை தேர்தலே இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் சிலர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அவசரப்படுகின்றனர். அதற்கு இன்னும் போதுமான கால அவகாசம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனநாயக ரீதியில் மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவுற்று சகல மாகாண சபைகளும் ஆளுநர்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராகி வருகின்றோம்.

ஆனால், சில கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. இது ஆரோக்கியமானதாகப்படவில்லை. மாகாண சபைகளுக்கான தேர்தலை காலம் கடத்துவது ஜனநாயக முறைமைக்கு விரோதமானதாகவேகொள்ளவேண்டியுள்ளது.

மாகாண சபைகளின் அதிகாரம் தனிநபர்களிடம் தொடர்வது ஆரோக்கியமானதல்ல. – எனவும் ஆணைக்குழுத் தலைவர் மேலும் கூறினார்.

# மடகஸ்காரில் வாகன விபத்து; மூன்று இலங்கையர்கள் சாவு!

கொழும்பு,நவ.04

மடகஸ்காரில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மூன்று இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர்.

கார் ஒன்று கங்கை ஒன்றில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மடகஸ்கார்,எண்டனாரியோ நகரின் கிளை வீதியொன்றில் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமையன்று இரவு 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தக் காரில் பயணம் செய்த மூன்று இலங்கையர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என மடகஸ்கார் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் எனசீசெல்ஸிலுள்ள உயர்ஸ்தானிகரம் குறிப்பிட்டுள்ளது.

சீசெல்ஸ் உயர்ஸ்தானிகர அதிகாரிகளின் தலையீட்டில் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வெளிநாட்டவருக்கு ஓர் அங்குலம் நிலத்தைக் கூட நாம் விற்கவில்லை

## அடித்துக் கூறுகின்றார் சம்பிக்க



கொழும்பு, நவ. 04

வெளிநாட்டவர்களுக்கு ஓர் அங்குலம் நிலத்தைக்கூட விற்கவில்லை என அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் அமெரிக்காவுடன் மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம் எனவும் அமெரிக்காவின் மரணப் பொறியில் இலங்கை சிக்கியுள்ளது எனவும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பலர் கூறுகிறார்கள்.

உண்மையாகவே நாங்கள் அமெரிக்காவுடன் அத்தகையதொரு ஒப்பத்தில் கையெழுத்திடவில்லை. மேலும் மிலேனியம் ஒப்பந்தத்தின் ஊடாக 48 கோடி டொலர் இலவசமாக எமது நாட்டுக்குக் கிடைக்கிறது.

இதனூடாக நாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியும். ஆனால், இந்த மிலேனியம் ஒப்பம் தொடர்பாக பொய்யான பரப்புரைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டவர்களுக்கு ஓர் அங்குலம் நிலத்தைகூட நாங்கள் வழங்கவில்லை – என்றார். (ஐ)



## வடமாகாண

# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**




## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

## TAMIL NATIONAL GREEN ORGANIZATION

# சஜித்துக்கு வாக்களிப்பின் அதிகாரப்பகிர்வு கோட்டாவை ஆதரித்தால் வெள்ளை வான்!

## கிளிநொச்சி மக்களிடம் கூறினார் பிரதமர் ரணில்





கிளிநொச்சி, நவ.04

2015 ஆம் ஆண்டு அன்னத்திற்கு வாக்களித்த எம்மிடம் ஆட்சியை வழங்கியமையால்தான் நாட்டில் ஜனநாயகம் ஏற்பட்டது. எனவே புதிய அரசமைப்பை உருவாக்கி அதன் ஊடாக அதிகாரபகிர்வு வேண்டுமானால் மீண்டும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வருகின்ற 16ஆம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்க வேண்டும் என கிளிநொச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்பொழுது நாட்டில் வெள்ளை வான் வருவது கிடையாது, ஆனால் மக்களை தேடி அவசர அம்புலன்ஸ் வருகிறது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டுமா, இல்லை என்பதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மொட்டுக்கு வாக்களித்தால் வெள்ளை வான் மட்டுமே வரும்.

2015 க்கு பின்னர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யலாம், ஊர்வலம் போகலாம், பேசலாம், எழுதலாம் இந்த நிலைமை தொடர வேண்டுமா? வேண்டாமா? நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவற்றை உருவாக்கி சுதந்திரத்தை உருவாக்கியுள்ளோம்.

2015க்கு பின் புதிய அரசமைப்பை ஏற்படுத்த முயற்சித்த போதும் நாடாளுமன்றத்தில் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமையினால் அதனைக் கொண்டுவர முடியாது போய்விட்டது. ஆனால் புதிய அரசமைப்பின் ஊடாக



அதிகார பகிர்வை கொண்டுவரவேண்டுமானால் மக்கள் செய்ய வேண்டியது இரண்டு விடயங்கள்தான். ஒன்று வரும் 16ஆம் திகதி அன்னத்திற்கு வாக்களித்து சஜித்தை ஜனாதிபதியாக்குவது, இரண்டாவது நாடாளுமன்றத்தில் 120 க்கு மேறபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை எமக்கு வழங்குவது.

கிளிநொச்சியை அபிவிருத்தியை செய்வதற்கு நாம் பல்வேறு திட்டங்களை முன்வைத்துள்ளோம். ஆனையிறவு உப்பளம் புனரமைத்தல், பூநகரியில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் திட்டங்களை ஏற்படுத்துதல்,வடக்கு, கிழக்கில் விசேட பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், தொழில் வாய்ப்பினை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மேற்கொள்வோம். – எனவும் குறிப்பிட்டார்.

# சுதந்திரக்கட்சியின் பிளவுக்கு சந்திரிகாவே முழுக் காரணம்

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 04

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியவர் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சந்திரிகா குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தற்போது பாதுகாக்க முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறுகின்றார்.

ஆனால் ஒருகாலத்தில், அவர்தான் கட்சியில் பிளவை ஏற்படுத்திச் சென்று புதிய கட்சியை உருவாக்கினார். இதன்போது நாங்கள்தான் கட்சியைப் பாதுகாத்தோம். அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொற்காலம் ஆகும்.

எனவே, சந்திரிகா இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

# மிலேனியம் உடன்பாடு கையெழுத்திடப்படுமா?

## அமெரிக்கா சந்தேகம்

கொழும்பு, நவ. 04

மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கையுடனான உடன்பாடு கையெழுத்திடப்படுமா என்பது நிச்சயமற்றதாகவே உள்ளதாக மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன் தெரிவித்துள்ளார்.

மிலேனியம் சவால் உடன்பாட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்த பின்னர், அதற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அதேவேளை, தேர்தல் முடியும் வரை அந்த உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டாம் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

இந்தநிலையில் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன்–

இந்த உடன்பாடு கையெழுத்திடப்படுமா என்பது தெளிவில்லாமலேயே உள்ளது. இது மிலேனியம் பணிப்பாளர் குழு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது.

உடன்பாடு குறித்து தவறான பரப்புரை மேற்கொள்ளப்படுவதால், கையெழுத்திடப்படுமா என்பது குறித்து நிச்சயமற்ற நிலை உள்ளது.

மிலேனியம் சவால் இதற்கு முன்னர் இதுபோன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டதில்லை. டிசெம்பர் 9 ஆம் திகதி நடக்கவுள்ள மிலேனியம் சவால் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் இந்த முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்படும் – என்றார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



30 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2019 இல் வெளியிடப்பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2019 இல் வெளியிடப்பெற்றது.